தமிழ்ப் பொழில்

தமிழாராய்ச்சித் திங்களிதழ்

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடு

த·3448

மலர் : 2

தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு - 2024

துணர் : 70 தாது - வைகாசி மலர் : 2

மே- 1996

1) கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் அறிவியல் கருத்தரங்கம் — 578
நெல்லை சு. முத்து

2) சங்க இலக்கியங்களில் அறிவியல் கோட்பாடுகள் — 582
திரு. சு, தமிழ்வேலு

3) அறநெறி எது? — 591
தவத்திரு. குமாரசாமித்தம்பிரான்
காறுபாறு - காசித்திருமடம்

4) வில்லிபாரதத்தில் கிளைக் கதைகள் — 593
வல்லம். ந. சாந்தி ரவிச்சந்திரன்

5) வேமனாவின் சிந்தனைகள் — 598
முனைவர். இரா. குருநாதன்

6) அறிவு மொழி எது? — 607
சொல்லியல்புலவன். பக்கிரிசாமி M. A., M Ed,
(சென்ற இதழ் தொடர்ச்சி)

7) சூழலியல் நோக்கில் சிறுகதைகள் — 614
முனைவர். இரா. சண்முகவேலன்

பதிப்பாசிரியர் பேராசிரியர் ச. பாலசுந்தரம்

தமிழ்ப்பொழில் ஆசிரியர் குழு

திரு. ச. இராமநாதன்,
தலைவர், கரந்தைத் தமிழ்ச்சங்கம்

திரு த.கோ.ப. கோவிந்தசாமி, பி.காம்.,
செயலாளர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

திரு கலைமாச்செல்வர் எஸ் டி காசிராஜன் ஐ.ஏ.எஸ்.,
முன்னாள் செயலாளர், தமிழ்வளர்ச்சி பண்பாட்டுத்துறை,
சென்னை.

திரு. சிலம்பொலிசு.செல்லப்பன், எம்.ஏ., பி.டி., பி.எல்., பிஎச்.டி.
முன்னாள் இயக்குநர்,
உலகத் தமிழராய்ச்சி நிறுவனம், சென்னை.

திரு. முனைவர். சி. பாலசுப்பிரமணியன், எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி
முன்னாள் துணைவேந்தர், தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சை.

திரு. முனைவர். தமிழண்ணல் எம்.ஏ., பிஎச்.டி.,
முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர்,
மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம்,
'ஏ ரகம்' 4/384, சதாசிவநகர், வண்டியூர்வழி,
மதுரை -625 020.

திரு. முனைவர். மு கோவிந்தராசன்,
பேராசிரியர், தமிழ்நாடு கல்வி ஆராய்ச்சி மற்றும்
பயிற்சி நிறுவனம், சென்னை.

திரு. முனைவர். சோ.ந. கந்தசாமி, எம்.ஏ., எம்.லிட், பிஎச்.டி.,
இலக்கியத்துறைத் தலைவர், தமிழ்ப் பல்கலைக் கழகம்

திரு. முனைவர். மா. இராமலிங்கம், எம்.ஏ., பிஎச்., டி.,
தமிழ்த்துறைத் தலைவர், பாரதிதாசன் பல்கலைக்கழகம்,

திரு. தமிழ்த்தொண்டர் கோ முத்துப்பிள்ளை, பி.ஏ.,
முன்னாள் அரசு இணைச் செயலாளர், சென்னை.

திரு. முனைவர் ஈரோடு தமிழன்பன், எம்.ஏ., பிஎச்.டி.,
தமிழ் முதுகலைத்துறை, புதுக்கல்லூரி, சென்னை.

திரு பேராசிரியர் பி. விருத்தாசலம், எம்.ஏ.,
முதல்வர், தமிழவேள் உமாமகேசுவரனார்
கரந்தைக் கலைக்கல்லூரி.

திரு. புலவர் செ. இராசு, எம்.ஏ,
இணைப்பேராசிரியர். கல்வெட்டுத்துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சை.

திரு. புலவர் ஆ. பாலன், எம்.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி.,
துணை முதல்வர், த.உ. கரந்தைக் கலைக்கல்லூரி.

திரு. புலவர் மீனா. இராமதாசு, எம்.ஏ., எம்.எட்.,
தலைமைத் தமிழாசிரியர், உமாமகேசுவரமேனிலைப்பள்ளி

திரு. முனைவர். பா. மதிவாணன், எம்.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி.
தமிழ் விரிவுரையாளர், த.உ. கரந்தைக் கலைக்கல்லூரி.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் 'அறிவியல் தமிழ்' கருத்தரங்கம்

நெல்லை சு. முத்து

"கலை நூல்கள் தமிழில் எழுதப் பெறாதது பெருங்குறையாக எல்லோராலும் கருதப்படுகிறது. கலைநூல்களைத் தேடுவாரில்லாதபடியால் அவை வெளிவரவில்லை" என்பர் ஒரு சாரார். நூலில்லாமையால் பயில்வாரில்லை என்பர் மற்றொரு சாரார். தமிழில் எழுதப்பெறும் கலைநூல்களுக்கு உண்மையான தேவை நாட்டில் இருந்தால் நூல்கள் ஒன்று பலவாகத் தோன்றிவிடுமென்பது எனது நம்பிக்கை. ஏற்ற தமிழ்ச் சொற்கள் நூலிலோ வழக்கிலோ கிடைக்குமெனின் அவற்றைப் பயன்படுத்த வேண்டும். இல்லாத வழி தமிழில் படைத்துக் கோடல் வேண்டும். இதுவும் முடியாவிடில் பிற மொழிக் குறியீட்டுச் சொற்களைத் தமிழ் மரபிற்கேற்ப திரித்து அமைத்துக் கோடல் வேண்டும். இவையே பண்டையோர் கொண்ட முறை. பழைய இலக்கியங்களில் பயிலும் வடசொற்களும் திசைச்சொற்களும் பெரும்பான்மையாகத் தற்சம, தற்பவ மொழிகளாய்த் தமிழ் எழுத்தால் எழுதப்படுதலும், தமிழ்ச்சொற்களையே இணைத்து வேற்றுமொழிச் சொற்களில் பொருளைத் தருமாறும் படைத்துக் கொள்ளுதலும் வழக்கமாயிருந்து வந்திருக்கின்றன. பிற மொழியாளர்கள் கையாளும் முறைகளும் இவையேயாகும். சாம்புநதம் என்பதை நாவலம் பெரிய பொலம் என வழங்கினர். "நாவாய்" என்ற தமிழ்மொழியை Navy என யவனர் திரித்துக்கொண்டனர். இதுபோலவே ஆங்கிலேயரும் அரிசி இஞ்சி என்பவற்றை Rice, Ginger என ஆக்கிக் கொண்டனர்.

சுமார் அறுபது ஆண்டுகளுக்கு முன்னால் 1934-ஆம் ஆண்டு திருநெல்வேலியில் நடைபெற்ற சென்னை மாகாண தமிழர் மாநாட்டின்போது தமிழ்வேள் திரு தஞ்சை வே. உமாமகேசுவரம் பிள்ளை நிகழ்த்திய தலைமைப் பேருரை இது

தஞ்சாவூர் அருகே கரந்திட்டைக்குடியில் 14 5-1911 அன்று சங்கம் நிறுவிய துங்கன் திரு இராதாகிருட்டிணரின் வரவேற்புரையுடன், நாவலர் ந மு. வேங்கடசாமி நாட்டார் தலைமையில் துவங்கப்பெற்ற "கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் முதல் தலைவர் பதவி வகித்தார் திரு த வே. உமாமகேசுவரம் பிள்ளை.

தமிழ் சமய, இலக்கிய இசைத் தொண்டின் விரிவாக்கமாக இன்று அறிவியல் தமிழ்ப் பணியிலும் ஈடுபட்டுள்ளது கரந்தைத் தமிழ்ச் சங்கம் ஆரம்ப காலங்களில் தோற்றுவித்த இலவச படிப்பகம், நூலகம் மட்டுமின்றி 6—10—1916 அன்று தமிழ்ச் சங்கத்தில் உருவான "செந்தமிழ்க் கைத்தொழில் கல்லூரி" மெல்ல மெல்ல இராதாகிருட்டிண தொடக்கப்பள்ளி, உமாமகேசுவரர் மேல்நிலைப் பள்ளி என்றெல்லாம் அரியதோர் கல்வி நிறுவனமாக மலர்ந்துள்ளது.

திருப்பாதிரிப்புலியூர் சிவசண்முக மெய்ஞ்ஞான, சிவாச்சாரிய தேசிக அடிகளார் விபுலானந்த அடிகளார், மறைமலையடிகளார், பண்டிதமணி கதிரேசன் செட்டியார், டாக்டர் சோமசுந்தர பாரதியார். டாக்டர் இரா. பி. சேதுப்பிள்ளை, திவை சதாசிவப் பண்டாரத்தார், டாக்டர் அ சிதம்பரநாதன் செட்டியார், ந மு கோவிந்தராய நாடார் போன்ற தமிழறிஞர் பலருடன் இலக்கியத் தொடர்பு கொண்ட பீடுமிக்கது கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

சா. ராம மு சித பெத்தாச்சி செட்டியார், அழகிரிசாமி பிள்ளை, முத்தமிழ்க் காவலர் திரு கி ஆ பெ. விசுவநாதம் தொடங்கிய சான்றோர் பெருமக்கள் பலரை புரவலராகப்பெற்றுத் திகழுகின்ற பெருமை வாய்ந்த இத்தமிழ்ச் சங்கத்திலிருந்து 1925-ஆம் ஆண்டு முதல் "தமிழ்ப்பொழில்" என்னும் விஷய கனமிக்கதொரு இலக்கியச் செய்தி திங்களிதழ் வெளிவந்து கொண்டிருக்கிறது

விபுலானந்த அடிகளின் கலை நுட்பமான "யாழ்நூல்" உட்பட நக்கீரர், கபிலர், பரணர், பாயிரவிருத்தி தொல்காப்பியம் தெய்வச்சிலையார் உரை, தமிழரசி, குறவஞ்சி போன்ற ஏறத்தாழ இருபது நூல்கள், நினைவ மலர்கள் இச்சங்க வரலாற்றின் பொன்னொளிரும் வைரப்படிகள்.

தஞ்சை வடவாற்றின் வட தென்கரைகளில் வளர்ந்தோங்கி வளர்ந்துள்ள கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் தமிழவேள் உமாமகேசுவரனார் கரந்தை கலைக் கல்லூரியில் பலதுறை முதுகலை வகுப்புகள்வரை சிறப்பாக நடைபெற்று வருகின்றன. தேவையான தொழில் நுட்ப ஆய்வுக் கூடங்கள், அறிவியல் பரிசோதனைச் சாலைகள் என முழுமையுடன் திகழ்கின்றது இக் கல்லூரி.

1995 ஜனவரியில் தஞ்சாவூரில் நடைபெற்ற எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டினையொட்டி தமிழக முதல்வர் மேதகு டாக்டர் ஜெ ஜெயலலிதா அவர்கள் அறிவித்த 75 இலட்சம் ரூபாய் நன்கொடை பெற்று முதல்வர் பெயரில் அறக்கட்டளை நிறுவி முதலாவதாக - 'அறிவியல் தமிழ்க் கருத்தரங்கம்' ஒன்றினை தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத்துடன் இணைந்து 1996 பிப்ரவரி 9, 10 ஆகிய நாட்களில் கரந்தைத் தமிழ்ச்சங்கத் தமிழ்ப் பெருமன்றத்தில் வெகு சிறப்பாக நடத்திக் காட்டியும் இருக்கிறது

இந்தக் கருத்தரங்கின் தொடக்க விழாவன்று காலை - தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் முனைவர் ஜி. கருணாகரன் அவர்கள் தலைமையில் கரந்தைத் தமிழ்ச் சங்கத் தலைவர் திரு ச. இராமநாதன் வரவேற்புரை நிகழ்த்தினார். கருத்தரங்கக் கட்டுரைத் தொகுப்பான 'அறிவியல் தமிழ்' எனும் அரிய நூலினை - காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகத் துணைவேந்தர் முனைவர் பெ. இராமசாமி அவர்கள் வெளியிட - தமிழவேள் உமாமகேசுவரனார் கரந்தை கலைக் கல்லூரி முதல்வர் திரு பி விருத்தாசலம் அவர்கள் முதல் பிரதியினைப் பெற்றுக்கொண்டார்

தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் அறிவியல் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் இராம. சுந்தரம் அவர்கள் நன்றியுரையுடன் தொடக்கவிழா நிறைவுற்றது

அன்று மதியம் நடைபெற்ற கருத்தரங்க முதல் அமர்வின் போது முனைவர் ப அர. நக்கீரன் (பேராசிரியர், உற்பத்திப் பொறியியல் துறை, அண்ணா பல்கலைக்கழகம், சென்னை) தலைமையில் - முனைவர் சு நரேந்திரன் (இரப்பை குடல் உள்நோக்கி மற்றும் அறுவை சிகிச்சை சிறப்பு மருத்துவர், தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி) முனைவர் அருணா இராசகோபால் (இயக்குநர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோவை) திரு நெல்லை சு. முத்து (விஞ்ஞானி, விக்கிரம் சாராபாய் விண்வெளி மையம், திருவனந்தபுரம்) ஆகியோர் ஆய்வுக் கட்டுரைகள் படித்தனர்.

தொடர்ந்து இரண்டு நாட்களிலுமான நான்கு இணை அமர்வுகளில் ஏறத்தாழ 35 கட்டுரைகள் விவாதிக்கப்பெற்றன.

10 - 2 - 96 அன்று காலை நடைபெற்ற மூன்றாம் அமர்வினுக்கு திரு நெல்லை சு முத்து தலைமை வகித்தார். இவ்வமர்வில் முனைவர் ப. அர நக்கீரன், டாக்டர் மு. துளசிமணி (இளநிலை மருத்துவ அதிகாரி, அரசு பொது மருத்துவமனை, பாண்டிச்சேரி), திருமதி லொ. ஆ உமாமகேசுவரி (ஆய்வாளர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை), திரு. பா. மாசிலாமணி (சித்த மருத்துவர், பாண்டிச்சேரி) வெ உமா (ஆய்வாளர், புதுவை பல்கலைக் கழகம், பாண்டிச்சேரி) ஆகியோர் தம் ஆய்வுரைகள் இடம்பெற்றன.

அன்று மாலை கருத்தரங்க நிறைவு விழாவில் கரந்தை தமிழ்ச்சங்கச் செயலாளர் திரு த.கோ.ப. கோவிந்தசாமி பி.காம். அவர்கள் வரவேற்புரையினைத் தொடர்ந்து திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் பதிவாளர் முனைவர் சு. தங்கமுத்து அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.

அடுத்து கருத்தரங்கப் பேராளர்களின் பிரதிநிதிகளான முனைவர் அருணா இராசகோபால், முனைவர் ந. சடிகாசலம் (உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை) ஆகியோரைத் தொடர்ந்து மூன்றாவதாக உரை நிகழ்த்திய திருவனந்தபுரம் விக்ரம் சாராபாய் வான்வெளி மையத்தைச் சார்ந்த விஞ்ஞானி நெல்லை சு. முத்து அவர்கள், இன்று நடப்பது அறிவியல் யுகம் என்றும், அறிவியல் என்பது தகவல் சாதனம் அல்லவென்றும், தகவல் சார்ந்த சிந்தனைச் சாதனம் என்றும் குறிப்பிட்டார். அறிவியல் தமிழ்க் கட்டுரைகளைப் பாடநூல்களில் இடம்பெறச் செய்வதன் மூலம் மாணவர்கள் மத்தியில் அறிவியல் சிந்தனை வளர உதவலாம் எனக் குறிப்பிட்டார். (தமிழ்ப்பொழில் பிப்ரவரி 1996)

அறிவியலுக்கும் கலைக்கும் தமிழுக்குமாக ஒரு நூற்றாண்டினை நோக்கிய வளர்ச்சிப் பாதையில் ஒளிசுட்டும் கரந்தைத் தமிழ்ச் சங்கம் தஞ்சையிலோர் சாந்திநிகேதனாக மேன்மையுற வாழ்த்துகிறோம்.

நன்றி : **"கேரளத் தமிழ்"**
திருவனந்தபுரம் தமிழ்ச்சங்க செய்தி
இலக்கிய மாத இதழ்
மலர் : 19, இதழ் 4, ஏப்ரல் 19்6.

சங்க இலக்கியங்களில் அறிவியல் கோட்பாடுகள்

(அறிவியல் தமிழ்க் கருத்தரங்கக் கட்டுரை)

சு. தமிழ்வேலு

தமிழ்மொழி பன்னூறு ஆண்டுகளுக்கு முன் இலக்கியம் கண்டது. இம்மொழி மானுடனின் வாழ்வை மட்டும் புலப்படுத்த வில்லை. அதில் ஆங்காங்கு நுணுகி அவன் வாழ்வினை மேம்படுத்துவதற்குத் துணையான அறிவியல் கூறுகள் ஒரு சில நுவலப்பெற்றுள்ளன. இவ்வறிவியற் கூறுகள் பிற்கால அறிவியல் வல்லுநர்களால் கோட்பாடுகளாக உருவாக்கப் பெற்றுள்ளன. அக்கோட்பாடுகளுக்கு மூலப்பிறப்பிடம் என்று நுவலும் வகையில் தமிழ் இலக்கியங்களும் இருந்துள்ளன.

இலக்கியமும் அறிவியலும்

மனித வாழ்க்கையின் சுவைப் பிழிவை 'இலக்கியம் என்று கூறுவர். கற்பனையும் உணர்ச்சியும் நல்ல வடிவில் கலந்தளிக் கப்பெறும் புனைவுப் படைப்பே இலக்கியம். இது மெய்யும் பொய்யும் கலந்து விளைந்த விளைச்சல் நில அடியையும் விசும்பையும் திரிவிக்கிரம வடிவமாக இணைக்கும் பெருவடிவம்.

அறிவியல், கருதுகோளிலிருந்து பிழிந்தெடுக்கப்பட்ட மெய்வடிவச் சூத்திரம். சூக்குமத்தின் சூக்குமத்தை அளந்தறி யும் மூளையின் ஒப்பற்ற அருஞ்செயல், மனிதனை ஆக்க இமயத்திலும் அழிவுக் கிடங்கிலும் அமர்த்த வல்ல அலாவுதீன் கை அற்புத விளக்காகும்.

தொல் மனிதன் எந்நாளில் சிக்கிமுக்கிக் கற்களைக் கண்டறிந்து பயன்பாட்டை உணர்ந்தானோ அன்றே அறிவியல் தொடங்கிவிட்டது. அதே போன்று இயற்கையைக் கண்டு அவன் உள்ளம் கிளரப்பட்ட அன்றே இலக்கியமும் தொடங்கி விட்டது. எந்தவொரு நாட்டு இலக்கியத்திலும் அந்நாட்டு மக்களின் அனுபவங்கள், எண்ணங்கள் நிறைந்திருக்கும். அவ் வனுபவமும் எண்ணமும் காலப்போக்கில் அறிவியலாய் முகிழ்க்க இடமுண்டு.

இலக்கியக் கற்பனையும், அறிவியல் கருத்துருவாக்கமும்

எந்தவொரு கூறினையும் நாம் புதிதாகக் கண்டுபிடிப்ப தற்கு முன்னர், அதைப்பற்றிய கருத்துருவாக்கம் நம் மனத்தில் தோன்றும். அக்கருத்துருவாக்கம் வளர்ந்து புதுமைகள் பல பெற்று நிற்கும்பொழுது புதிய கண்டுபிடிப்புகள் உருவாகின்றன

மின்சார விளக்கினைத் தாமஸ் ஆல்வா எடிசன் கண்டு பிடிக்க எண்ணற்ற முறை முயற்சி மேற்கொண்டார். அதோடு, அவருக்கு முன்னர் பலரும் ஆய்வுகள் செய்துள்ளனர். இதன் வளர்ச்சிப் படியிலேயே மின்விளக்கு ஒளிர்ந்தது. இத்தகைய மின்விளக்கு ஒளிர்வதற்கு முன்னர், எத்தனையோ மனிதர்களின் எண்ணங்கள் இதுகுறித்துச் செயல்பட்டிருக்கும் என்பது உண்மையாகும்.

1969-ஆம் ஆண்டு சூலை 21ஆம் நாள் நீல் ஆர்ம்ஸ்ட்ராங் நிலவில் காலடி வைத்த செய்தி சாதனையாகப் பேசப்பட்டது. இச்சாதனை செய்வதற்கு உறுதுணையாக, தூண்டுகோலாகக், கருதுகோளாக இருந்தது ஆஸ்கார் ஒயில்டு கற்பனையாகத் தீட்டிய அவருடைய நாவலே ஆகும் இதனை அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் ஒப்புக்கொள்கின்றனர்.[1]

இதைப் போன்று நம் நாட்டு மகாகவி பாரதியார் நுதலிய "காசிநகர்ப் புலவர் தம் உரைதனைக் காஞ்சியில் கேட்பதற்குக் கருவிகள் செய்வோம்" என்ற பாடல் வரிகள் தொலைபேசிக்கு வடிவமைத்தன என்று கூறமுடியாவிட்டாலும், அதைப்பற்றிய கருதுகோள் அக்கருவி கண்டுபிடிப்பதற்கு முன்னரே சிந்தனை யில் எழுந்தது என்று கூறலாம்.

இங்ஙனம் சங்க இலக்கியங்களில் கோட்பாட்டு ரீதியில் சிந்திக்கப்பட்ட கருத்துகள் நுவலப் பெறுகின்றன.

தமிழிலக்கியங்களில் அறிவியற் கோட்பாடுகள்

இருபத்து மூன்று நூற்றாண்டுக் காலத் தமிழிலக்கிய வரலாற்றில் பல அறிவியல் மணிகள் பொதிந்துள்ளன. அவற்றில் சங்க கால இலக்கியங்களில் பயின்று வந்துள்ள அறிவியல் கோட்பாடுகளை இக்கட்டுரை எடுத்தியம்புகின்றது.

சங்க இலக்கியத்தில் அறிவியல் கோட்பாடுகள்

கி.மு 3-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 3-ஆம் நூற்றாண்டு வரை தோன்றிய இலக்கியங்களைச் சங்க இலக்கியம் என்று சுட்டுகின்றனர். இவ்விலக்கியங்களில் பல்வேறு அறிவியல் கோட்பாடுகள் நுவலப்பெற்றுள்ளன. அவற்றை வகைப்படுத்திக் காண்பதே இப்பகுதியின் நோக்கமாகும்

நியூட்டனின் இயக்க விதிகள்

நியூட்டன் மூன்று விதிகளைக் கண்டறிந்தார். அவை விசையின் வேகம் பற்றியதாகும்.[2]

1 ஒரு பொருளின் புடைப்பெயர்ச்சி தன்மீது பிறவிசை தாக்கப்படாத நிலையில் மாற்றமின்றி அமையும்.

2. திசை வேகம் பொருளின்மீது தாக்கும் விசையைப் பொறுத்ததாகும்

3. ஒவ்வொரு தாக்குதலுக்கும் சமமான மறு தாக்குதல் உண்டு

இவ்விதிகளில் இரண்டாவது விதியானது விசையை அளப்பதற்கு உதவியாக அமையக் கூடியதாகும். ஒரு நேர்க் கோட்டில் செல்லும் விசையானது குறிப்பிட்ட ஒரு பொருளின் மீது தாக்கும்போது அந்த விசை வேகம் மாறுபடும் அல்லது குறையும்.

இவ்வடிப்படையில் புறநானூறு 152-ஆம் பாடலில் வன்பரணர் வல்வில்ஓரியின் வில்லாற்றலைப் புகழ்ந்து கூறும் பொழுது எய்த வில்லானது யானை, புலி, புள்ளிமான், பன்றி, உடும்பு போன்றவற்றை வீழ்த்தியதாகக் கூறப்பெறுகின்றது.

“வேழம் வீழ்ந்த விழுத் தொடைப்பகழி
பேழ்வாய் உழுவையைப் பெரும்பிரிது உறீஇப்
புழல்தலைப் புகர்க்கலை உருட்டி, உரல்தலைக்
கேழல், பன்றி வீழ அயலது
ஆழற்புற்றகத்து உடும்பில் செற்றும்
வல்வில் வேட்டம் வலம்படுத் திருந்தேன்”[3]

இவ்விசையின் வேகம் குறைந்து ஒன்றிலிருந்து மற்றொன்றைத் தாக்கி சிறிய உயிரினைத் தாக்கு விசை நிலைபெற்றது என்று கூறும்பொழுது, இரண்டாவது விதி பொருந்தியுள்ளது. மேலும்,

> "பேயாற்று
> நீர்வழிப்படூஉம் புணைபோல் ஆருயிர்
> முறைவழிப் படூஉம் என்பது திறவோர்"[4] என்ற

இப்பாடலில், ஆற்றின் வழியே செல்லும் தெப்பமானது நீரின் விசையை மட்டும் பெற்றுச் செல்கின்றது. இதில் வேறு விசை ஏதும் தாக்கப்பெறவில்லை. அதுபோல், வாழ்க்கை ஒரு சீராகச் செல்லவேண்டும் என்று கூறப்பெற்றுள்ளது. இதிலும் இரண்டாவது விதியான ஒரு பொருளின்மீது செயல்படும் தாக்கு விசையானது, அத்தாக்கு விசையின் திசையிலேயே அப்பொருள் செயல்படும் என்கின்ற இவ்விதியைப் பொருத்திப் பார்க்க முடிகின்றது

சார்புக் கொள்கை

ஒரு சாதாரண பரப்பை அதன்மீதுள்ள எண்ணிறந்த புள்ளிகளின் மூலம் வரையறுக்கலாம் என்பதே ஐன்ஸ்டீனின் கொள்கைகளில் ஒன்றாகும்.[6]

அதாவது ஒரு பெரிய தளத்தின் அளவினைக் கணக்கிட எண்ணுகையில், அதன் நடுவில் வைக்கப்படும் புள்ளியோ, அல்லது கோட்டின் மூலமோ கணக்கிட்டு அறியலாம் என்பதாகும்.

இவ்வடிப்படையில் குறுந்தொகையில் மக்கள் புழக்கத்தில் இருந்த ஒரு பெரிய தளம் எவ்விதப் பயன்பாடும் இல்லாமல் இருக்கும் தன்மையைப் புனைந்து காட்டுகின்றது. அம்மன்றலில் ஓர் அணில் மட்டும் விளையாடுகின்றது என்று காட்டும்பொழுது அதன் பரப்பளவை உணர முடிகின்றது.

> "சாறு கொள் ஊரின் புகல்வேன் மன்ற
> அத்தம் நண்ணிய அம்குடிச் சீறூர்
> மக்கள் போகிய அணில் ஆடு முன்றிற்
> புலம்பில் போலப் புல்லென்று"[7]

இப்பாடலின் மூலம் அத்திடலின் பரப்பினை உணருமாறு செய்கின்றார்.

உளவியல்

உளவியல் பகுப்பாய்வு மருத்துவர்கள் தங்களுடைய ஆய்வின் மூலம் புதியதொரு நோயினைக் கண்டறிந்தனர். அந்நோய் உறக்கமின்மை நோய் என்பதாகும். இந்நோய் கவலை மிகுதியால் உறங்காமல் போகின்ற நிலையில் உருவாகக் கூடியது.

இந்நோயினை அவ்வல்லுநர்கள் எங்ஙனம் கருதினரோ, அவ்வாறே உணர்ந்து குறுந்தொகையில் எழுதப்பெற்றுள்ளது.

> " கவலை யாத்த அவல நீள் இடைச்
> சென்றோர் கொடுமை ஏற்றி துஞ்சா
> நோயினும் நோய் ஆகின்றே" [8]

தலைவன் இல்லாத போழ்து தலைவி படும் துன்பங்களைப் பற்றியும் அவள் உறும் அவலங்களைப் பற்றியும் கூறும் சங்க இலக்கியச் செய்யுட்கள் தலைவியின் மனநிலையினைப் படம் பிடித்துக் காட்டக்கூடியன. அவை உளவியல் அறிஞர்கள் கூறும் கருத்துகளோடு தொடர்புடையனவாக உள்ளன.

உயிரியல்

சங்க இலக்கியங்களில் 150 மரம் செடி கொடிகளின் பெயர்கள், தன்மைகள், இவற்றின் பயன்பாடு போன்ற பல்வேறு செய்திகள் குறிப்பிடப்பட்டுள்ளன.[9] இதைப்போன்று 30க்கும் மேற்பட்ட விலங்குகளின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.[10]

விலங்கினங்களில் அதன் தன்மைகளுக்கேற்ப பல்வேறு வகைகளாக வகைப்படுத்திக் காட்டப்பெறுகின்றன. அவ்வாறு சுட்டப்பெறும் விலங்குகளில் சில வருமாறு.[11]

மான், கழுதை ஆகியன	- ஐந்து வகைகள் உள்ளன.
குரங்கு, நாய், ஆந்தை, நாரை	- நான்கு வகைகள் உள்ளன.
எலி, முதலை	- மூன்று வகைகள் உள்ளன.
புலி, அணில்	- இரண்டு வகைகள் உள்ளன.

இவ்வாறு விலங்கினங்களின் வகைகளைக் கூறுவதோடு சில அரிய விலங்குகளின் பெயர்களையும் சுட்டிக் காட்டியுள்ளனர்.

நீலகிரிக் கருங்குரங்கு, வருடையாடு, மலைக்கிரி, காட்டெருமை போன்றன சிலவாகும்.

இவற்றையெல்லாம் நுணுகிக் கண்டு அவற்றின் வகைப் பாட்டைத் துல்லியமாகத் தெரிவித்துள்ளனர்.

இன்று மேலைநாடுகளில், உயிர்க்காட்சிச் சாலைகளில் (Zoo) ஒவ்வொரு விலங்கையும், பறவையையும் அதற்குரிய சூழ்நிலையோடும், அவை தங்கியிருக்கும் இடத்தையும் சுற்றுப் புறத்தையும் போன்று அமைத்துக் கண்காட்சியில் இடப்பெற வைக்க வேண்டும் என்று கருதுகின்றனர்.

அதைப்போன்று சங்கப் புலவர்கள் இந்தச் சூழலில் இந்த விலங்கு, பறவை வாழும் எனக் கருத்தில் கொண்டு அந்நிலப் பாடலுக்கு அவற்றை மட்டும் பயன்படுத்திப் பாடும் கருப் பொருள் அமைப்பு சுட்டத்தக்கது

மான் கொம்பு

மானுக்குக் கொம்பு முளைப்பதும், கிளைவிடுவதும், வளர்வதும், உதிர்வதும், திரும்ப முளைப்பதும் ஆகிய செயல் களை இன்றைய அறிவியல் வல்லார் கண்டறிந்து உரைத் துள்ளனர்.

> "கலைமான் தலையில் முதன் முதல் கவர்ந்த
> கோடல்அம் கவட்ட குறுங்கால் உழுஞ்சில்" [12]

> "பல்கவர் மருப்பின் முதுமான் போக்கி" [13]

> "கள்ளி அம் காட்ட புள்ளியம் பொழிக்கலை
> வறன்உறல் அம்கோடு உதிர வலங் கடந்து
> புலவுப்புலி துறந்த கலவுக்கழி கடுமுடை" [14]

இக்கருத்தை உற்று நோக்கும்போது மானை மட்டும் பாடாது, மானின் வாழ்நாளில் நடைபெறுகின்ற செய்திகளையும் நீடு நினைத்துப் பாடியுள்ளமையும் கொம்பு உதிர்வதும் மீண்டும் துளிர்ப்பதுமான செயல்களைக் கூறுவதும் வியப்புக்குரியவை

தாவரவியல்

தாவரங்களைப் பற்றிக் குறிக்கும்பொழுது பல்வேறு அறிவியல் செய்திகளைப் பாடியுள்ளனர் மேலும் தாவரங்

களைப் பாடும்பொழுது அவற்றின் சிறப்புத் தன்மையைத் தனிப்படப் பாடுகின்றனர். அது செடியியலில் பெயரிடும் தன்மையை ஒத்துள்ளது

பாலை நிலச் செடிகளுக்கு வேர் ஆழமாகச் செல்லும். நீர் வளத் தாவரங்களுக்கு வேர் கிழங்கு வடிவில் இருக்கும். அடிக்கிளைகளில் இருந்து எழும் தாங்கு வேர்களை விழுதுகள் என்று குறிப்பிடல் அடிமரத்தின் உருவம், நிறம், மற்றும் பட்டைகளின் தன்மை முதலிய செய்திகள், மலர்களின் கூட்டம், நிறம், உருவம், அமைப்பு ஆகிய இவை நுவலப்பெறுதல், மகரந்தத் தூளினைத் தாது என்று குறிப்பிடல் பூக்களில் தேன் நிரம்பியிருத்தல்; பழங்களின் நிறம், உருவம், அமைப்பு அவை முதலியன கூறப்படல்; விதையைக் காழ் எனக் குறிப்பிடுதல்.

இதைப்போன்று பல்வேறு செய்திகளைத் தாவரவியல் நூலார் நுவல்வது போன்று தெளிவுபட சங்கச் செய்யுட்களில் சொல்லப்பட்டுள்ளன.

வானியல் கருத்துக்கள்

சங்கச் சான்றோர் வானியல் அறிவினையும் பெற்றுத் திகழ்ந்திருந்தனர் என்பதற்கு வால்மீன் பற்றியும் (புறம். 229), வானில் ஓர் எல்லைக்கப்பால் காற்று செயல்படா நிலையையும் (புறம் 365), கோள்நிலை திரியின் தட்ப வெப்பமும், மாறுபடக் கூடும் என்பதையும் (புறம். 117) கூறியுள்ளனர்.

இதைப்போன்று சூரியனின் நிலையினை விளக்கும்பொழுது,

"செஞ்ஞாயிற்றுச் செலவும்
அஞ்ஞாயிற்றுப் பரிப்பும்
பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும்
வளிதிரி தருவிசையும்
வறிது நிலைஇய காயமும் என்றிவை
சென்றளந் தறிந்தோர் போல என்றும்" [15]

என்னும் புறப்பாட்டு, தற்கால அறிவியல் முடிவுகள் பலவற்றின் கருதுகோள்களைப் பெற்றுள்ளது என்று சொல்வதாக அமைந்துள்ளது.

ஞாயிற்றுச் செலவு, ஞாயிற்றுப் பரிப்பு, ஞாயிற்று மண்டிலம் என்பன நீளநினைக்கத் தக்கன. கோள வடிவான

ஞாயிறு மண்டிலமாகக் காட்சி தருதல், அதன் ஒளி எல்லை, ஒளி காலும் வட்டம் ஆகியன இப்பாட்டிற் காணப்படுகின்றன.

சென்றளந்து அறிந்தோர் போல என்னும் தொடர் தொலைவிலிருந்து அவற்றைக் கண்ணாலும் மனத்தாலும் அளந்த நிலையையும், அணுக்கமாய்ச் சென்று துல்லியமாய் அறிய விழைந்த ஆர்வத்தையும் காட்டுகின்றது.

புறநானூற்றுப் பாடலின் (229) ஓரரசன் இன்னாளில் இறப்பான் என்று கூற அந்நாளில் அவன் இறந்து பட்டது குறிக்கப்படுகின்றது.

இவ்வாறு வானியல் கருத்துகள் பல கோட்பாட்டு ரீதியில் சங்கச் சான்றோர் தெளிவுற காட்சிப்படுத்தியுள்ளனர்.

இன்னபிற அறிவியல் கூறுகள்

இவை மட்டுமன்றி பல்வேறு அறிவியல் கூறுகள் நுவலப் பெற்றுள்ளன. இடி, மின்னல், மழை, பனி ,போன்ற செய்திகளும் சேமச் செப்புகலன், கோள், இராசிபலன், அறுவை மருத்துவ ஊசி (நெடுவல்லூசி - பதிபத்து) என்பன போன்ற அறிவியல் கருத்துருவாக்கங்கள் பலவும் சங்கச் செய்யுட்களில் நுதலியுள்ளன.

இவையொத்த இன்னும் பல செய்திகளை உள்ளடக்கிய அறிவியல் நெறி தமிழுக்குப் புதியதல்லாத ஒன்று எனக்காட்டும். அறிவியல் நெறியில் சிந்திப்பதற்கும், கற்பதற்கும் ஓர் அருமையான ஊடகம் (Medium) தமிழ்மொழியாகும்.

முடிவுரை

சார்லஸ் டூவர்ட் என்ற அறிஞர் வோர்ட்ஸ் வொர்த் கவிதையே எனக்கு வாழும் நம்பிக்கையைத் தந்தது; அறிவியலோ வாழ்வில் இன்பத்தைக் கூட்டியது என்பார். இங்ஙனம் இரண்டும் இணைந்து செயலாற்றும் தன்மையினை இக்கட்டுரையின் கருப்பொருளிலிருந்து அறிந்துகொள்ள முடிகின்றது.

அக் கருப்பொருள்கள் வருமாறு,

சங்க இலக்கியத்தில் பல்வேறு அறிவியல் கோட்பாடுகள் நுவலப்பெற்றுள்ளன.

1. நியூட்டனின் இரண்டாம் இயக்க விதி
2. ஐன்ஸ்டீனின் சார்புக்கொள்கை
3. வானியல் கோட்பாடுகள்
4. உயிரியல், உளவியல் கோட்பாடுகள்
5. தாவரவியல் செய்திகள்

முதலியன.

துணை நூல்கள்

1. சி. பாலசுப்பிரமணியன்,
   "சங்க இலக்கியம் சில பார்வைகள்" ப 24
2. கலைக்களஞ்சியம், ப. 535
3. புறநானூறு, பா. எண். 152, 1-6
4. மேலது, பா. எண். 192, 8-10
5. திருக்குறள், 319
6. கலைக்களஞ்சியம், பக் 593-94
7. குறுந்தொகை, பா 42, 2-5
8. மேலது, 224, 1-3
9. கு. சீனிவாசன், சங்க இலக்கியத் தாவரங்கள்
10. பி. எல். சாமி, சங்க இலக்கியத்தில்
    அறிவியற் கலை, ப. 13
11. மேலது. பக். 13-16
12. அகநானூறு, பா எண். 151, 7-8
13. மேலது, பா. எண். 283-4
14. மேலது, பா. எண். 97, 1-3
15. புறநானூறு, 30, 1-6

அறநெறி எது ?

தவத்திரு குமாரசாமித் தம்பிரான்
காறுபாறு — காசித்திருமடம்

உலகில் மக்கள் தங்களுக்கு என்று ஒரு குறிக்கோள் இல்லாது சுற்றித் திரிகின்றனர். இதை உணர்த்த அப்பர் பெருமான் "குறிக்கோள் இலாது கெட்டேன்" என்பார்.

குறிக்கோள் என்பது தன் வாழ்க்கைக்குத் தேவையான நெறியினைப் பின்பற்றி கடைப்பிடிப்பதே; அவ்வழி ஒழுகுவதே யாகும். அந்நெறி நன்னெறியாக இருக்கவேண்டும். தீ நெறியை விலக்க வேணடும். அஃந்நன்னெறியை நன்னடை என்றும் கூறலாம். அதனால்தான் "நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே" என்று புறநானூறு காட்டுகிறது. இந்நன்னடையில் வெற்றிகண்ட இராமனை "நடையில் நின்றுயர் நாயகன்" என்பான் கம்பன்.

இவ்வற நெறியினை எல்லாச் சமயங்களும் பேசுகின்றன. தக்கவழி காட்டுகின்றன. அவ்வழியே எத்தனை மக்கள் செல்கின்றார்கள் என்பதே கேள்விக்குறியாகி விட்டது. அரசு பல சட்டங்களைச் செய்து நன்னடத்தையைப் போதிக்கின்றது. எத்தனை மக்கள் அதனைக் கடைப்பிடிக்கின்றனர் எத்தனை காலங்கள் நீடிக்கின்றன என்பதை அறிய வேண்டிய சூழ் நிலைக்கு ஆளாயிருக்கிறோம்.

வழித்தடத்தில் வெயில் காலத்தில் தூரத்தில் நடந்து வருகின்ற ஒருவன் பார்க்கின்றான் அங்கே நீர் அலைகள் அவன் கண்களுக்கு விருந்தளிக்கின்றன. நாம் போய் அந்நீரை உண்டு தாகம் நீக்கிக் கொள்ளலாம். என்று செல்கின்றான். செல்லச் செல்ல வெயிலாக இருக்கிறதே தவிர அங்கு நீர் இல்லை. அப்போது உணருகின்றான் நாம் பார்த்தது கானல் நீர்தான் என்று. இதைப்பலரும் செய்கின்றனர். ஒருவன் மட்டுமல்ல, பலரும் கையிலே குடம் கொண்டு போகிறார்களாம்: கானல் நீரை முகந்து எடுத்துவர; என்னே அறியாமையுள் புரியாமை, அறம் பேணாமையொரு புறம் செய்வது, இப்படிப்பட்ட மக்கள் நெறியல்லாத சமயத்தை, அறம் காட்டாத சாத்திரங்களை, அன்பு செய்யாத ஆன்மாவைத் தேடி அலைந்து ஏமாற்றம் பெறுகிறார்கள். இதனைச் சம்பந்தர்,

"சடங்கொண்ட சாத்திரத்தார் சாக்கியர் சமண்குண்டர்
மடங்கொண்ட விரும்பியராய் மயங்கியோர் பேய்த்தோப்பின்
குடங்கொண்டு நீர்க்குச் செல்வசர் போதுமின் குஞ்சரத்தின்
படங்கொண்ட போர்வையிலான் பகுப்பதம் பரவுதுமே"

என்பார்.

எனவே புன்னெறியில் செல்லும் அறிவின் போக்கினை மாற்றி நன்னெறிக்கு ஆற்றுப்படுத்தவேண்டும்.

இதனை,

"புன்னெறி அதனிற் செல்லும் போக்கினை விலக்கி மேலாம்
நன்னெறி ஒழுகச் செய்து நவையுறு காட்சி நல்கி" என

கந்தபுராணம் காட்டுகின்றது.

சைவ சித்தாந்தத்தில் பதி ஞானம், பசு ஞானம், பாச ஞானம் என்று உண்டு. பதி ஞானத்தை அடைவதற்கு பசு ஞானம், பாச ஞானத்தைக் கடக்க வேண்டும். இப்பாச ஞானத்தை ஸ்ரீ குமரகுருபரர் புல்லறிவு என்றும், தீநெறி என்றும் காட்டுவசர்.

"தீநெறி விலக்கி நன்னெறிப் படர்தற்"
— சிதம்பர மும்மணிக்கோவை-8

"புல்லறிவகற்றி நல்லறிவு கொளீஇ"
— மேற்படி 11 என்று காட்டுவசர்

இக்கருத்துக்கு அடித்தளமாக இருந்த திருவாசகம்!

"நெறியல்லா நெறிதன்னை நெறியாக நினைவேனைச்
சிறுநெறிகள் சேராமே திருவருளே சேரும் வண்ணம்"

என்று காட்டுகின்றன. இச்சிறு நெறிகள் சேராதிருக்க என்ன செய்ய வேண்டும்? அறநெறி போற்ற வேண்டும்? அறநெறி என்பது என்ன? அறநெறியாவது வாழ்த்துவதும், நினைப்பதும், தாழ்த்துவதும் ஆகும். எதை வாழ்த்தவேண்டும் நமக்கு மேலாக இருந்து நம்மை இயக்குகின்ற இறைவனை, அவனை வாழ்த்துவதால் அவனுக்கு பெருமையல்ல நாம் வாழ்வதற்காகவே. நமக்கு உடல், பொருள், ஆவி, கொடுத்தற்காகவே. நினைவே சுகந்தம் என்பதால் அவனின் புகழ்சேர் புராண நிகழ்வை நினைக்க வேண்டும், தாழ்த்துவது பிரமதேவன் தலை போன்று பிச்சைவோடாக ஆகாமல் இருக்க தாழ்த்தவேண்டும்.

வில்லிபாரதத்தில் கிளைக் கதைகள்

வல்லம் ந. சாந்தி இரவிச்சந்திரன்
தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சாவூர்.

முகப்புரை :-

உலகக் காப்பியங்கள் அனைத்திலுமே கிளைக் கதைகள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. ஹோமர், மில்டன், வர்ஜில் போன்றவர்களின் காப்பியப் படைப்பிலும் கூட கிளைக் கதைகள் பற்றிய சிந்தனைகள் அரும்பியுள்ளன. சங்க இலக்கியந்தொட்டு காப்பியங்கள் வரை கிளைக் கதைகள் பற்றிய எண்ணச் சிதறல்கள் மிளிர்கின்றன.

மண்ணாசையால் ஏற்பட்ட மாற்சரியத்தின் விளைவால் நிகழ்ந்த தாயாதிச் சண்டையை மையமாகக் கொண்ட பாரதத்திலும் பல கிளைக்கதைகள் இடம் பெற்றுள்ளன தாயாதிச் சண்டை தர்மத்திற்கும் அதர்மத்திற்கும் உரிய சண்டையாக வளர அந்தக்கதைக்கு விதையாகவும், வேறாகவும், செடிகளாக

592-ம் பக்கத் தொடர்ச்சி

எனவே நினைப்பதும், தாழ்த்துவதும், வாழ்த்துவதும், என்ற முக்கரணச் செயல் செய்வதே அறநெறியாகும். நினைப்பது மனத்தின் அறநெறியாகும். வாழ்த்துவது வாக்கின் அறநெறியாகும், சென்னி தாழ்த்துவது காயத்தின் அறநெறியாகும்.

“வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்த சென்னியும் தந்த தலைவன்”

எனும் அப்பரடிகள் வாக்கும் ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கது.

இந்நெறியே அறநெறியாகும். மற்றவைகள் புறநெறியாகும், இவ்வறநெறியே தாம் ஒழுகும் வழியென அறிந்த மக்களுக்கு கடல்சூழ்ந்த உலகம் இனிதாகும். இவ்வறநெறியை போதிப்பதும், அவர்களுக்கு உறுதிப்பயன் தருவதைக் கூறுவதும் ஆகிய கருத்தை ஸ்ரீ குமரகுருபரர்,

“வாழ்த்துமின் றில்லை நினைமின் மணிமன்றம்
தாழ்த்துமின் சென்னி தலைவற்கு — வீழ்த்த
புறநெறி யாற்றா தறநெறி போற்றி
துறையறி மாந்தர்க்குச் சூழ்கட னிதுவே”

— சிதம்பர மும்மணிக் கோவை - 84.

என்று அருளுவார்.

வும், சிறு கிளைகளாகவும் பெருங்கிளைகளாகவும் இலைகளாக வும் அரும்பியுள்ளன. விதை, பூ, காய், கனிகளாகவும் அமைந்தன அருமையான விஷயங்கள். பெண்ணைத்தொட்டான் கெட்டான் அராவணன் என்று நீதி பேசும் பாரதத்தில் இடம் பெற்றுள்ள கிளைக்கதைகளை இனம் பிரித்துக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

கிளைக்கதையின் இலக்கணம் :-

கிளைக்கதையை-ஐரோப்பிய இலக்கியத் திறனாய்வாளர் கள் 'எபிசோட்' (Episode) என்பர். நீண்டு செல்லுகின்ற கதைக்கூற்று கவிதையின் (Narrative) நிகழ்ச்சிகளுக்கு இடை யில் அமையும். மற்றொரு கதை நிகழ்ச்சி மையக் கதையோடு நெருங்கிய தொடர்புடையதாகச் சில கதைகள் அமையலாம். சில அதிலிருந்து விலகியும் நிற்கலாம்[1] என்று இதனைக் கார்ல் பெக்ஸனுடைய இலக்கியக் கலைச்சொல் அகராதி விளக்கு கிறது. வடமொழியில் கிளைக்கதையை 'உபாக்கியானம்' என்பர். பாரதத்தில் இடம் பெறும் நளன் கதை 'நளோபாக் கியானம்' எனப்படும்.

அரிஸ்டாட்டில் கருத்து :-

காப்பியப்பாடு பொருள் முதன்மையானதாய் முழுமை யானதாய் ஒப்பற்றதாய் திகழ்வதால் அதற்கு எந்நிலையிலும் துணைபுரிகின்ற கதைகள், சிறந்த கிளைக்கதைகள் எனப் படும். ஒதிஸ்ஸிக் காப்பிய கட்டமைப்பை வியந்து போற்றும் அரிஸ்டாட்டில் கூறும் கருத்துக்கள் கிளைக்கதைகள் எவ்வாறு அமைதல் வேண்டும் என்பதைத் தெளிவுறுத்துகின்றன.

> எடுத்துக்கொண்ட மையக்கதை முழுமையானதாய் அமைய அதனைச் சுற்றிப் பின்னப்படும் கிளைக் கதை களும் மையக்கதையிலிருந்து பிரித்துக்காண முடியாத வாறு காப்பியக்கட்டமைப்புடன் ஒன்றிவிட வேண்டும். இவற்றுள் ஒன்றை நீக்கினாலும் இடம் மாற்றி அமைத் தாலும் அதன் முழுமைத்தன்மை சிதைந்து கட்டமைப்பு குலைந்துவிடும். நீக்கி விட்டாலும் சேர்த்துக்கொண்டா

(1) Karl Beckson, Arthor Ganz - A READER'S GUIDE TO LITERARY TERMS A DICTIONARY Thomes and Herdson, London, 1966 P-61

ளும் அதன் முழுமைக்கு எவ்விதத் தீங்கும் விளைவிக்காத கிளைக்கதை அதன் கட்டமைப்போடு உயிர்த்தொடர் புடைய உறுப்பாக விளங்க முடியாது.[2]

காப்பியங்களில் கிளைக் கதைகள் :-

காப்பியக் கட்டமைப்பு நெகிழ்வுப் போக்குடையதாய், கவிஞனின் கதைக்கூற்று முறையில் அமைவதாலும், நீண்டமை கின்ற இலக்கியமாகையால் அதனளவைப் பெருக்கிக்கொள்ளும் தன்மையது ஆதலாலும் கிளைக்கதைகள் காப்பியங்களில் இடம் பெறுகின்றன.

புராணக் கதைகள் :-

கவிக்கூற்று கதை மாந்தர் உரையாடல்களின் மூலமாக கதைமாந்தர், அவருடைய முன்னோர், தேவர்கள், உறவினர் மற்றும் பொன்னுலகு, பாதலம், பாற்கடல் போன்ற புராணப் பொருட்களைப் பற்றியும் பற்பல கதைக் கூறுகள் காப்பியம் முழுவதிலும் ஆங்காங்கு சிதறிக் கிடக்கின்றன. மையக்கதை யிலிருந்து மனதைத் திசை திருப்பி சிறிது நேரம் இன்புறுவது கிளைக்கதைப் பண்பு என்னும் மேனாட்டார் கொள்கைப்படி ஆயின் இவையும் கிளைக்கதைகளாகக் கொள்ளத்தக்கன.

கிளைக்கதை வகைகள் :-

மேனாட்டார் கருத்துப்படி கிளைக்கதைகளை மூன்று நிலைகளில் பகுத்துக் காணலாம்.

I கிளைக் கதைகள்
- காப்பியக் கதையுடன் நேரடி தொடர்புடையது
- காப்பியக் கதையுடன் நேரடி தொடர்பற்றது

II கிளைக் கதைகள்
- காப்பியக் கதை நிகழ் காலத்தை ஒட்டியது
- காப்பியககதை நிகழ்வுக்கு முன்னர் நிகழ்ந்தது
- காப்பியக்கதை நிகழ்வுக்கு முன் நிகழ்ந்து காப்பியக்கதை நிகழ்வுகாலத்தில் முகிழ்த்து முழுமையானது

(2) S. H. Butcher, ARISTOTLE'S THEORY OF POETRY AND FINE ART WITH A CRITICAL TEXT AND TRANSLATION OF THE POETICS. Kalyani Publishers, Ludhiana, 1972 P. 25

III கிளைக் கதைகள்
- கவிக் கூற்றாக வருவன
- கதைமாந்தர் கூற்றாக வருவன
  - தன் கதையைத் தானே கூறுதல்
  - மற்றொருவரின் கதையைக் கூறுதல்

நேரடி தொடர்பில்லாக் கதைகள் :-

'புளியம்பழமும் ஓடும் போல' காப்பியக் கதையுடன் தொடர்பில்லாக் கதைகளை நீக்கிவிட்டால் கூட காப்பியக் கட்டமைப்பு குலைவதில்லை. காப்பியத்தோடு உறுப்பமைதி இல்லாக் கதைகளை அரிஸ்டாட்டில் போற்றவில்லை. பாரதத்தில் இடம்பெறும் கங்கை, துரோணன் கதை இவ்வகையினவாம்.

காப்பியக்கதை நிகழ்வுக்கு முன்னர் நிகழ்ந்து காப்பியக் கதையுடன் நேரடி தொடர்புள்ள கதைகள் :-

காப்பியக் கதை நிகழ்வுக்கு முன்பே நிகழ்ந்த ஆனால் கதைமாந்தர்களால் எடுத்துக்கூறப்படுகின்ற கிளைக்கதைகளை இதனுள்ளே அடக்கி விடலாம் என்பர். கதை நிகழ்வுக்கு முன்னர் நிகழ்ந்து பின் பூரித்து மலர்ந்த கதை என்றாலும் குந்தியின் கதையும், அதனால் வெளிப்படும் கர்ணனின் பிறப்பு வரலாறும், திரௌபதியின் பழம் பிறப்பு உணர்த்தும் நளாயினியின் வரலாறும் இவ்வகையினவாம்.

கவிக் கூற்றாக அமையும் கிளைக் கதைகள் :-

பாரதத்திற்கு முதல்வடிவம் தந்த வியாசர் சுட்டும் திரௌபதியின் பழம்பிறப்பு வரலாறு இவ்வகையைச் சாரும்.

கங்கையின் கதை :-

நான்முகன் அவையில் வருணனின் காம நோக்கால் ஏற்பட்ட சாப அனுபவிப்பு நிலையே சந்தனு-கங்கை வரலாறு. காமதேனுவைக் கவர முற்பட்ட பிரபாசன் உள்ளிட்ட அட்ட வசுக்களின் வரலாறே வீடுமன் உள்ளான எட்டு குழந்தைகளின்

பிறப்பு காப்பியத்தின் தொடக்கத்தில் இடம்பெறும் இக்கதை யால் காப்பியத்திற்கு எவ்வளர்ச்சியுமில்லை. தொடர்பற்ற தனியொரு கதையான இது இன்றியும் வீடுமனின் பெருமையை விளங்கிக்கொள்ள முடியும்.

துரோணன் கதை :-

காப்பிய மாந்தர்களின் ஆசிரியர் என்ற நிலையில் துரோணரின் பெருமை பேசப்பட்டாலும் குருகுல வாசிகளான துருபதன் துரோணரின் பிழைபட்ட நட்பினை விளக்குவதாய் இக்கதை விளங்குகிறது காப்பிய வளர்ச்சிக்கோ, பாத்திர பண்பு விளக்கத்திற்கோ இக்கதை எங்ஙனும் துணைபுரிவதாக இல்லை.

குந்தியின் கதை :-

காப்பியக் கதையுடன் நேரடி தொடர்புகொண்ட குந்தி யின் கதை இளமைப் பருவத்தில் துர்வாசர் கொடுத்த இனிய மந்திர வரத்தினைச் சோதித்ததன் விளைவால் ஏற்பட்ட அவளின் வாழ்வியல் பாதையையும் காப்பியத்தில் கடைசிவரை வந்து செல்லும் பாத்திரமான கர்ணனின் பிறப்பினையும் விளக்கி நிற்கிறது.

நளாயினி கதை :-

பாரதக் காப்பியத் தலைவியின் முற்பிறப்பு வரலாறு அல்லது பலபிறவிகள் பற்றிய செய்தி இடம் பெறுவதால் தலைவியைப் பற்றி கற்பவர் அறிந்து, ஐயம் போக்கிக்கொள்ள உறுதுணையாக உள்ளது. காப்பியத் தலைவியின் பண்பிற்கு ஊறு நேரலாகாதென்ற நன்னோக்கத்தால் கூறப்படும் இக் கதை கூறப்பட்ட முன்கதைகளிலும் சிறப்புடையதாகத் திகழ் கிறது எனலாம்.

சராசந்தன், இரணியபுர வரலாறு :-

காப்பியத்தில் பெரிதும் இடம் பெறும் பாத்திரமான வீமனின் வலிமை பேசுவதாய் சராசந்தன் வரலாறும், வில் விசயனின் தோளாற்றலை வெளிப்படுத்துவதாய் நிவாதகவசர், காலகேயர் வதமும் இடம் பெற்றுள்ளன. பாரதப் போரில் பெரும் பங்காற்றவிருக்கும் விசயனின் வீரத்தை வெளிப்படுத்து வதால் இக்கதை காப்பியத்திற்குத் தேவையான ஒன்று எனலாம்.

வேமனாவின் சிந்தனைகள்

முனைவர் : இரா. குருநாதன்,
தமிழ்த்துறை, த. உ. க. கல்லூரி

உலக வாழ்க்கை ஒரு நாடகம் போன்றது என்பதை உணர்ந்தவர்கள் ஞானிகளாவர். அவர்களின் எண்ணங்கள் வலிவானவை. அவர்களது எண்ண ஓட்டத்தால் தான் உலகம் இயங்குகிறகி. ஆந்திர மாநிலத்தில் பிறந்த வேமனா என்னும் யோகி மக்கள் கவிஞராகவும், அனுபவ ஞானியாகவும், சீர் திருத்த சிற்பியாகவும் வாழ்ந்தவர்

குடும்பத்தில் மனைவி மக்களோடு வாழ்ந்த வேமனா வாழ்வை வெறுத்து, மெய்யறிவு பெற்று இடையில் ஓர் ஆடை யோடு நாடோடியாக நெடுங்காலம் வாழ்ந்தவர். முறையான கல்வி அறிவு பெறாத வேமனா இயற்கை அறிவுபெற்றவர்.

தன்னை மறந்து வாழ்ந்த வேமனா தன்னினமான மனித இனத்தை மறக்காது அவர்களுக்கு அறிவுரைகளை, அறவுரைகளை எளிமையான பாடல்களாகக் கூறியுள்ளார்.

வாழ்வில் எல்லாவற்றையும் துறந்த வேமனா மனித இனத்தை மறக்காத பண்பு அவரது கருணை உள்ளத்தைக் காட்டுகிறது.

பேய்போல் திரிந்தும் பிணத்தைப் போல கிடந்தும், நாயைப்போல உணவருந்தியும், நரியைப் போல திரிந்தும் வாழ்ந்து வந்த வேமனாவின் அனுபவ சிந்தனைகள் மனித இனத்தை வாழ்விக்கும் மூலிகைகளாகும்.

597-ம் பக்கத் தொடர்ச்சி

முடிப்புரை :-

வில்லிபாரதத்தில் இடம் பெற்றுள்ள கிளைக்கதைகளுக் கும் பிற தமிழ்க் காப்பியங்களில் இடம் பெற்றுள்ள கதைகளுக் கும் மிகுந்த வேறுபாடு உண்டு. இரட்டைக் காப்பியங்களிலோ, இராமாயணத்திலோ, எடுத்தாளப்படும் கிளைக்கதைகளில் பெரும்பாலானவை காப்பியத்திற்குத் துணை செய்வதாகவோ பாத்திரங்களின் பண்பை விளக்குவதாகவோ அமைகின்றன. பாரதத்தைப் பொறுத்தவரை நூலில் இடம் பெற்றுள்ள கிளைத் கதைகள் அத்துணைச்சிறப்புடையன அல்ல எனலாம்.

இளமையான வயதில் தவறான வழியில் சென்று சொத்துக்களை இழந்து திசை மாறிப்போன வேமனா ஞான மயக்கம் ஏற்பட்டு, தன்னனுபவ உண்மைகளைப் பாடலாக்கித் தந்தார். அவர் பாடிய 7000 பாடல்களில் இதுவரை நாலாயிரம் பாடல்களே அச்சுவாகனம் ஏறியுள்ளன.

நாட்டைக் கெடுக்கும் அதிகாரி மகான்களின் வாக்கை மறப்பவன் உண்டவீட்டிற்குத் துரோகம் செய்பவன், நன்றியை மறப்பவன் ஆகியோர் ஒரு போதும் மேல்நிலை அடைய மாட்டார்கள் என்பது பொது நீதி. வேமனாவின் அறிவுரை களைக் கேட்டு நாமும் உயரவேண்டும்.

காணக் கண்ணிருந்தும் நினைக்க மனமிருந்தும் யாருக் கும் பயனின்றி மண்ணுக்குள் போகும் மனித இனத்தைக் கண்டு வேமனா வேதனை அடைகின்றார். வேமனாவின் சிந்தனைகள் தமிழகத்துச் சித்தர்களை நினைவுபடுத்துகின்றன இனி வேமனாவின் சிந்தனைச் சுரங்கத்திற்குள் செல்வோம்.

இறைவன் மனிதனுக்காகத் தந்த அரும்பெரும் பொருள் மனம். மனமது தூய்மையானால் மந்திரம் தேவையில்லை என்ற கருத்தை வேமனாவும் எதிரொலிக்கின்றார்.

மனத்தூய்மையும், ஒற்றுமை உணர்வும் தெய்வீக நிலைக்கு மனிதனை உயர்த்தும் என்பது வேமனாவின் எண்ணமாகும்.

மனத்தைத் தூய்மையாக்கினால் யோகம் கைகூடும். மனத்தை அலையவிட்டால் யோகம் என்னும் மேகம் மூடி, காமம் என்னும் மழை பெய்து வாழ்வை அழித்துவிடும்.

போலித்தனத்தையும், பொய்மையையும் வேமனா அறவே வெறுக்கின்றார். போலிச் சமயவாதிகளை அவர் வித்தியாசமான முறையில் கூறுவது நயம் மிக்கது.

புறத்தூய்மையால் மட்டும் கடவுளை அடைய எண்ணும் போலி ஆச்சாரவாதிகளைப் பார்த்து கொக்கும் தான் தினமும் குளிக்கிறது, அதன் மனம் கெட்ட நாற்றம் வீசும், மீனின் மேலல்லவா இருக்கிறது? என்று கேலி செய்கின்றார். மனத் தூய்மை இன்றி செய்யும் வழிபாடு கழுவாத பாத்திரத்தில் உணவு சமைப்பது போல் என்ற உவமையை வேமனா கூறுகின்றார்.

கழுவாத பாத்திரத்தில் உணவு சமைப்பதால் உணவின் சக்தி கெடுவதுடன், உண்பவனுக்கும் உடல் நலக் குறைவு ஏற்படும். மனத்தூய்மை இல்லாதவனின் வழிபாட்டால் இறை பெருமைக்கும் குறை நேருமல்லவா?

உருவ வழிபாட்டை வேமனா விரும்பவில்லை. சிவ பக்தரான வேமனா சீவனை சிவனாக வழிபட்டார்.

உருவ வழிபாட்டால் சடங்குகள் உண்டாகி, பரம் பொருள் தத்துவத்தை மறந்து, சங்கடத்தில் தவிக்கும். ஏது மறியா மக்களால்தானே சமுதாயம் சீர்கெடுகின்றது.

சிவபெருமானுக்கும், திருமாலுக்கும் வேறு பல சமய தெய்வங்களுக்கிடையே பலவித வேறுபாடுகள் இருந்தாலும் அவையனைத்திலும் இருக்கும் பரம்பொருள் ஒன்றே என்ற உண்மையை மக்கள் உணரவேண்டும் என்பது வேமனாவின் கருத்தாகும்.

ஒன்றே எல்லாம் எல்லாவற்றிலும் ஒன்றே என்ற உண்மையை உணர்ந்தால், சமயத்தால் சண்டை ஏது? மதத்தால் வதமேது சாதியால் சாவு ஏது? சமுதாயம் அமைதிப் பூங்காவாக அல்லவா காட்சி தரும். இறைவனுக்குப் பல விதமான் இனிப்பு வகைகளைப் படைக்கின்றோம் அவற்றை அவர் உண்பதில்லை. அவர் நம்மிடம் விரும்புவது உள்ளம் உருகும் பக்தியைத்தான் என்ற வேமனாவின் சிந்தனை ஆழம் பொதிந்ததாகும்.

உள்ளம் உருகினால் வாய்ச் சொல் இனிமையாகும். வாய்ச்சொல் இனிமையானால் மற்றவருக்கு ஆறுதல் கிடைக்கும். உள்ளத்தை உருக்கும் பக்தியை சிந்தியுங்கள்! என்ற வேமனாவின் வேண்டுகோளுக்கு நாம் செவி சாய்க்க வேண்டாமா?

பணத்தால் இறைவனது அருளைப் பெற முடியாது. தன்னை உணர்ந்து பக்தி செய்பவர்க்கு இறையருள் நிச்சயம் கிட்டும் என்ற வேமனாவின் சிந்தனை இன்றைய தேவை யாகும்.

தன்னை உணர்ந்தால் சடங்குகள் தானே நீங்கும். பக்தியைக் கூட சடங்காக்கும் அறிவிலா மக்களுக்காக வேமனா

வருந்துகின்றார். சமயத்துள் சடங்கு உண்டு ஆனால சடங்கே சமயமாகுமா?

ஓ மக்களே கற்கோயிலில் வீற்றிருக்கும் கடவுளைக்காண ஓடுகிறீர்களே, உங்கள் உள்ளத்தில் வாழும் இறைவனைக் காண மறந்தது ஏனோ? என்ற வினாவை வேமனா தொடுக்கின்றார் உள்ளமே பெருங்கோயில் என்று பாடிய திருமூலரை வேமனா நினைவுபடுத்துகின்றார்.

நடமாடும் கடவுளாகத் தாயை எண்ணியவர் வேமனா. மனைவியை வீட்டுத் தெய்வம் என்றும் பாடினார். தாயன்பில் திளைத்து வாழ்ந்த வேமனா, தாயை உணர்பவனே கடவுளை உணர முடியும் என்ற சிந்தனையைக் கூறுகின்றார். அனை வருக்கும் சம நோக்கு வேண்டும் என்று எண்ணிய வேமனா, பெண்ணை உயர்வாகக் கருதிய தன்மை குறிப்பிடத்தக்கது.

மனிதன் அனைவரையும் ஒன்றாகக் கருதினால் உண்மையை உணர்வான். உண்மையை நேசிக்கத் தொடங்கும் போது மனிதன் தெய்வமாகிவிடுகின்றான் என்பது வேமனாவின் எண்ணம்.

காவல் நிலையங்களும், வழக்கு மன்றங்களும், மருத்துவ மனைகளும் இடுகாடுகளும் மனிதன் இன்னும் மனிதனாக வில்லை என்றுதான் கூறுகின்றன. மனிதப் பிறவியைப் புனித மாக்க முயல்வோம்.

படித்தபடி நடக்காத மனிதர்களை, வேமனா கேலி செய்கின்றார். நல்ல நூல்களைப் படிக்கும்போது மட்டும் அவர்கள் மனிதனாக இருந்து, அதைப்படித்து முடித்ததும் தன்னிலையிலிருந்து இறங்கிவிடும் தன்மைக்கு, வேமனா அடுப்புக்கரியையும், பாலையும் உவமையாகக் காட்டுகின்றார்.

அடுப்புக்கரியில் பாலை ஊற்றும்போது கரியும் வெண்மை யாகவே தெரியும், பால் ஊற்றுவதை நிறுத்திவிட்டால் கரியின் இயல்பான கரிய நிறம் தெரியும். அறியாமை நிறைந்த கரிய நிறமான மனத்தை, உண்மையை உணர்ந்து வெண்மை நிறமாக மாற்றவேண்டும் என்பது வேமனாவின் கருத்தாகும். மனிதன் தெய்வநிலைக்கு உயரவேண்டும். அவன் விலங்கு நிலைக்கு இறங்கி விடுவதைக் கண்டு வேமனா வருந்துகின்றார்

கல்லைத் தெய்வம் என்று வழிபடுவது மிருகத்தனம். கல்லுக்குள் உள்ள இறைவனைப் பற்றியல்லவா நீ சிந்திக்க வேண்டும் என்ற வேமனாவின் வாக்கு சிவவாக்கியரை நினைவு படுத்துகின்றது.

கல்லில் இறைவன் இருப்பதாகக் கூறுகின்றாயே? அதை உடைத்தால் அது பார்க்குமா? கேட்குமா? உன் உள்ளத்தில் இறைவனுக்குக் கோயில் அமைத்து வழிபடு என்ற கிரியை மார்க்கத்தை வேமனா கூறுகின்றார்.

உயிரோடு உள்ள மாட்டைப் பட்டினிப் போட்டு அடிக்கின்றாய். அதுவே கல்லானால் தெய்வம் என்று வழிபடுகின்றாய் இது முறையா? என்ற வேமனாவின் சிந்தனை உள்ளத்தைத் தொடுகின்றது.

மேகமாகிய கண்களின் வழியாக இறைவன் உலக மக்களைப் பார்க்கின்றார். உலக மக்கள் இதயமாகிய கண்களால் இறைவனைக் காணவேண்டும் என்பது வேமனாவின் கருத்தாகும்.

சூரியனும், நிலவும் இறைவனது கண்கள் என்று இயற்கைத் தெய்வ வழிபாட்டை வேமனா சிறப்பித்துக் கூறுகின்றார்.

நம் கண்ணுக்குத் தெரியும் உலகம் இறைவனுக்குச் சொந்தமானது என்பது வேமனாவின் கொள்கையாகும். அனைத்து மனிதர்களும் கடவுளின் பிள்ளைகள்.

இறைவன் அனைவரையும் சமமாக நோக்குபவன். மனிதன் இறைவனாக ஆகவேண்டுமானால் அனைவரையும் சமமாக நோக்கவேண்டும்.

மனித வாழ்க்கை குறுகிய கால எல்லைக்கு உட்பட்டது என்பதை உணர்த்த ஞானிகளும் சித்தர்களும் மக்களுக்கு, நிலையாமையை அதிகம் வலியுறுத்தியுள்ளனர். மரணம் என்பது மனித வாழ்வின் முடிவுரை அல்லவா? முடிவுரை தானே முன்னுரையாகிய பிறப்பைச் சிறப்பிக்கும்.

எப்போது வரும் என்று தெரியாத மரணத்தை மறப்பவனே தீய செயல்களில் ஈடுபடுகின்றான் என்பதை வேமனா தெளிவாகக் கூறுகின்றார்.

இரும்புக் கருவி கெட்டுப் போனால் சரி செய்து கொள்ள லாம். அல்லது அதை உருக்கி வேறு கருவிகளையும் செய்ய லாம். ஆனால் உடலிலிருந்து உயிர் போனால், உயிரைப் பிடித்து வேறு உடம்புக்குள் செலுத்த முடியுமோ? என்ற வேமனாவின் கேள்வி, வேள்வியாகிறது

பெற்ற புகழ், அடைந்த திறமை, கற்ற கல்வி அனைத்தும் மரணத்தோடு கரைந்து விடும் எத்தனைப் பெரிய அறிஞனுக் கும், எப்போது மரணம் வரும்? அது எங்கு வரும்? என்று தெரியாது. மரணம் வரும்போது, அன்பான மனைவியாலும், அருமையான பிள்ளைகளாலும், பண்பான நண்பர்களாலும் உதவமுடியுமா? என்ற வேமனாவின் சிந்தனை நெஞ்சைத் தொடுகின்றது.

மரணத்தை யாரும் தவிர்க்க முடியாது. நிரந்தரமான நிச்சயமான மரணத்தை மனிதர்கள் மறந்திருப்பது அதிசயம் தான்.

மரணத்தை உணருபவன் தவறான வழிகளில் செல்ல மாட்டான் என்பது வேமனாவின் எண்ணமாகும்.

மரணத்தை நேசிக்கத் தொடங்கினால் மரணத்திற்கும் நிச்சயம் மரணம் வரும். மரணத்திற்கு மரணத்தைத் தருபவர் கள் மரணத்தை வென்றவராவர் வேமனாவும் மரணத்தை வென்றவராகவே காட்சி தருகின்றார்.

பட்டறிவும், பகுத்தறிவும் உள்ளுணர்வும் ஒன்று சேரும் போது மரணம், கிரணமாவதில்லை.

இறந்தபிறகு இறந்தவர்களுக்காகச் செய்யும் சடங்குகளை வேமனா வெறுக்கின்றார் இறந்தவர்களுக்காகச் செய்த படையலைக் காக்கைக்குப் படைப்பர். இறந்தவர்கள் காக்கை வடிவில் வந்து உண்ணுவதாகக் கருதும் மூட நம்பிக்கையை வேமனா கேலி செய்கின்றார்

மலந்தின்னும் காக்கைக்கும், இறந்தவனுக்கும் என்ன தொடர்பு? என்று வேமனா கேட்கும் கேள்வி முறையானது தான்.

கிடைத்தற்கரிய மனிதப் பிறவியை உயிர் உள்ளபோதே நல்ல செயல்களுக்குப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதே வேமனாவின் கொள்கையாகும்.

இறந்த காலத்தை எண்ணி வருந்தக்கூடாது எதிர் காலத்தை எண்ணி ஏங்கவும் கூடாது. நிகழ்காலத்தைச் செம்மையாகப் பயன்படுத்துவதே அறிவுடையவனின் செயல் என்பது வேமனாவின் எண்ணமாகும்.

வேமனா ஏற்றத்தாழ்வு இல்லாத சமுதாயத்தைக் காண எண்ணியவர். பிறப்பும், இறப்பும் அனைவருக்கும் ஒன்றாகவே இருக்கும்போது பிறப்பால் உயர்வு தாழ்வு கற்பிப்பது மடமையல்லவா? மனிதப் பண்பு உள்ளவன்தான் உயர்ந்தவன். அப்பண்பு இல்லாதவன் தாழ்த்தப்பட்டவன் என்ற இருபிரிவை வேமனா கூறுகின்றார்.

பிறப்பது இறப்பதற்காக அல்ல என்ற கொள்கையை வேமனா கொண்டிருந்தார்.

பன்றி பல குட்டிகளைப் போடுவதைக் காட்டிலும், யானை ஒரு கன்றைப் போடுவதே சிறந்தது. தனி மனிதனாக இருந்தாலும் பிறருக்குப் பயன் தருவதற்காக வாழவேண்டும். அதுவே மனிதப்பண்பு என்பதை வேமனா வலியுறுத்துகின்றார்.

எந்தக் காரியத்தையும் நம்பிக்கையோடு செய்யவேண்டும் நம்பிக்கையால் அன்பு வளரும், அன்பால் அமைதி வளரும், அமைதியால் பேரின்பம் கிட்டும். மனிதப் பண்பில் மனிதன் நம்பிக்கை கொள்ளவேண்டும் என்பது வேமனாவின் கருத்தாகும்.

தன்னால் முடிந்தவரை பிறருக்கு உதவ வேண்டும் பிறரைத் துன்புறுத்தி அதில் இன்பம் காணக்கூடாது. தன்னைவிட தாழ்ந்த நிலையில் உள்ளவர்களுக்கு உதவ வேண்டும் என்ற கருத்துக்கள் அவரது பாடல்களில் காணப்படுகின்றன.

உலகத்தில் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் பரம் பொருளைப் போன்றது பசி. பசியில்லா உயிர்களே இல்லை. உயிர்கள் அனைத்தும் தன்னை உணரவேண்டும் என்று இறைவன் பசி உணர்வைப் படைத்தான் போலும், பசியில்லை என்று மகிழ்பவர் யாருமுண்டோ?

பசியால் வாடுபவருக்கு உணவிடுவது மனிதப் பண்புகளில் ஒன்று என்பது வேமனாவின் கொள்கை. உணவிடும் போது இது புண்ணியமான காரியம், புண்ணியத்திற்குப்

பலனுண்டு என்று கருதிச் செய்யாதே! என்ற வேமனாவின் எச்சரிக்கை முறையானதுதான்.

மறு பிறவிக் கொள்கையை வேமனா போற்றவில்லை. இந்தப் பிறவியிலேயே மனிதனாக வாழ எண்ணாதவனுக்கு மறு பிறவியைப் பற்றிப் பேச என்ன உரிமை இருக்கிறது? என்ற வேமனாவின் கேள்விக்கணை சரியானதுதான்.

பகைமை, வறுமை பிணி, பொறாமை, அச்சம் ஆகிய வற்றில் மனித இனம் சிக்கித் தவிப்பதற்குக் காரணம் அற மின்மையும் அறத்தை உணரும் திறமின்மையும் தான்.

சாதியை விட மனிதப் பண்பு நீதி உயர்ந்ததல்லவா?

கிடைத்த பிறவி வாய்ப்பை நன்றாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் ஒரு காரியத்தை விரைந்தும் செய்யக் கூடாது, மெதுவாகவும் செய்யக்கூடாது என்ற வேமனாவின் சிந்தனை நயம் மிக்கது.

பழுப்பதற்கு முன்பு கத்தியால் அரிந்தால் அது காயாக இருக்கும். பழுத்த பின்னும் அதை அரியவில்லை என்றால் உண்ணமுடியாத அளவிற்கு அழுகிவிடும் என்ற வாழ்வியல் உவமையை வேமனா கூறுகின்றார். 'பருவத்தே பயிர் செய்'' என்ற தமிழ்ப் பழமொழியை வேமனா நினைவுபடுத்துகின்றார்.

விலங்குகள் கூட தன் மனத்தை நன்கு புரிந்து கொண்டு அந்த அளவிலேயே அமைதி கொள்கிறது. ஆனால் மனிதன் தனது உள்ளத்தின் வலிமையறியாமல் ஆசை வைத்து ஏமாற் றத்தை அடைந்து அவன் சமூக நோயாக மாறுவதை வேமனா கண்டு மனம் வருந்துகின்றார்.

உயிரோடு இருக்கும்போது தேவைக்கு மேலே சேர்த்து வைத்து அமைதியின்றித் தவிக்கும் ஏமாளி மக்களைப் பார்த்து, ''இறந்த பிறகு உன்னோடு வராத பொருளை நீ இருக்கும் போதே இல்லாதவருக்குப் பயன்படுத்து'' என்று வேமனா வேண்டுகோள் விடுக்கின்றார்.

அவ்வாறு பகிர்ந்து கொடுப்பவன் யோகியாவான். எல்லோரும் யோகியாகிவிட முடியாது. நல்ல குடும்பத்தில் வாழும் நல்லவனும் யோகிதான் என்று வேமனா யோகிக்குரிய ஒரு புதிய இலக்கணத்தைப் படைக்கின்றார்.

பொய் சொல்பவர்களும், வஞ்சித்து வாழ்பவர்களும் ஒரு போதும் முன்னேற முடியாது. அவர்களை ஓட்டைப் பானைகள் என்று வேமனா கூறுகின்றார்.

அவரவர்களின் வலிமைக்கேற்ப, தகுதிக்கேற்ப கால மறிந்து, இடமறிந்து செயல்கள் புரிய வேண்டும். தகுதியை மீறிய ஆசை தொல்லையைத் தரும். கடலில் மிதக்கும் கப்பல் சாலைக்கு வர எண்ணக்கூடாது.

தண்ணீரில் இருக்கும் வரைதான் முதலைக்கு வலிமை, தண்ணீரை விட்டு வெளிவந்தால் வலிமையான முதலையைப் பிற விலங்குகள் கொன்றுவிடும் என்ற வேமனாவின் வாழ்வியல் உவமைகள் வள்ளுவத்தை எதிரொலிக்கின்றன.

படிப்பறிவு இல்லாத பட்டறிவு யோகியான வேமனா, பாமர மக்களுக்காகவே பாடல்கள் எழுதினார். அவரையும் அறியாமல் ஒரு பாடலில் அவரது ஆசை வெளிப்பட்டு விடுகின்றது.

பட்டறிவு யோகியான் ஆசை

உலக மக்கள் அனைவருக்கும் ஒரே தட்டில் உணவு பரிமாறி அவர்களை உணவு உண்ணச் செய்யவேண்டும். அவர்கள் தங்களது வேற்றுமைகளை மறந்து உணவு உண்ணும்போது என் கைகளை உயர்த்தி அவர்களை வாழ்த்த வேண்டும் என்ற வேமனாவின் ஆசை நடைபெற முடியாது என்றாலும் அந்தக் கற்பனையான சிந்தனை உள்ளத்தைத் தொடும்போது வேமனாவின் விரிந்து பரந்த உள்ளமும், மனித இனத்தின் மீது அவர் கொண்ட அன்பும் ஒரு சேர புலப்படு கின்றன.

வேமனாவை மன்னராகக் கூறும் மரபுக் கதைகள் பல உண்டு. ஓட்டுநர் யாராக இருந்தால் என்ன? நமக்குப் பயணம்தான் முக்கியம் பூனையின் எச்சமென்று யாரும் புனுகினை வெறுப்பதுண்டோ, வேமனாவின் வாழ்வு முறை நமக்குத் தேவையில்லை. அவரது அமுத வாக்குகள் நம் வாழ்வுக்கு நிச்சயம் உரமளிக்கும் என்பதில் ஐயமில்லை! உண்மையை உணர்ந்து, ஒன்றுபட்டு வாழ்ந்து, மனித சமுதாயத்தை உயர்த்தப் பாடுபடுவோம். மனிதன் தெய்வமாக முடியும் என்ற வேமனாவின் சிந்தனைக்கு நாமும் தலை வணங்குவோம்.

[சென்ற இதழ் தொடர்ச்சி]

அறிவு மொழி எது ?

(இந்திய இணைப்பு மொழியாக எதை எந்தளவு ஏற்றால் பயன்)

சொல்லியல் புலவன் பக்கிரிசாமி, M. A., M. Ed.,
29, அபிராமி வடக்கு வீதி,
திருமலைராயல் பட்டினம் - 609 606.

ஆங்கிலமொழி பற்றிய இன்றைய கணிப்பும் குறைபாடும் :-

(1) ஆங்கில மொழியால் மட்டுமே நவீன அறிவியல்களை அறியமுடியும் என்ற கொள்கை அல்லது கருத்து உண்மை என்றால் ஆங்கிலம் அறியாதவர்கள் விஞ்ஞானியாகவும் மேதையாகவும இன்று வாழ முடியாது. ஆனால், உலக வரலாறு இவ்வாறு இல்லை (2) ஆங்கிலமொழி மூலம் பாடம் படிக்காத நாடுகளான ஜப்பான் ரஷ்யா அமெரிக்கா முதலிய நாட்டு மக்கள் நவீன அறிவியல்களை அறியாமல் இல்லை, என்பதுடன் நவீன கண்டுபிடிப்புக்கள் நாட்டுக்காக உழைக்கும் மனப்பான்மை 'இங்லாந்து மக்களுக்கு இவர்கள் குறைந்தவர்கள் அல்ல என்பது என்னுடைய கண்டுபிடிப்பன்று உலகறிந்த உண்மை (3) திருவள்ளுவர் கன்பியூசியஸ் சாக்ரடீஸ் நபிகள் நாயகம் ஏன்? ஏசு பெருமான் போன்றவரெல்லாம 'ஆங்கில மொழி மூலம்' அறிவு பெறவில்லை.

எனவே, ஆங்கில மொழி மூலமே 'நவீன அறிவை அறியலாம்' என்பது பொருந்தாது இதே விதிப்படியே தமிழர்கள் 'இந்தி மூலமே' கடைத்தேற முடியும் என்ற எண்ணம் அல்லது இன்றைய நிலை உண்மையாகாது (3) ஆங்கிலம இந்தி போன்ற மொழிகள் 'தமிழர்க்கு' அன்னிய மொழியாகும் அன்னிய மொழி மூலம் அறிவுபெற முடியுமா? என்ற கேள்விக்கு (1) ஆங்கில எழுத்தாளரின் கருத்தையும் (2) வட இந்திய மகாக்கவிதாகரின் கருத்தையும் மட்டும் காட்டுகிறேன். A writer's note Book என்ற நூலில் W. Somerset Maugham என்று ஆங்கிலேயரே "The labour required to acquire a real familiarity with a foreign tongue is Profitless என்று தெளிவாக வரைந்துள்ளார்.

அதாவது 'பிற மொழியில் உண்மையான பயிற்சி பெற வேண்டும் என்று பாடுபடுகிற உழைப்பு பயனற்றது' என்கிறார். இக்கருத்து தமிழர்க்கு 'இந்திக்கும்' பொருந்தும். இவ்வாறே

வடநாட்டார் இங்க்லீஸ் தமிழ் போன்றவற்றில்' அறிவு பெறப் பாடுபடுவது பயனற்ற உழைப்பே ஆகும்.

தாயோடும் தாரத்தோடும் உறவாட 'வக்கீலை வைத்து' பேசுவது போன்ற நிலையே 'பிறமொழி மூலம் படிப்பதாகும்' என்பதே தாகூர் கருத்தாகும்.

இதைப் படித்ததும் ஒரு ஐயமோ மறுப்போ கேள்வியோ எழலாம். அது வ அடுத்த குறிப்பாகும்.

(2) பிறமொழிப் படிப்பு பயனற்றதா? ஆங்கிலத்தைத் தாய்மொழியாகக் கொள்ளாத நேரு. ரைட்ஹான்ரபில் சீனிவாச சாஸ்திரி போன்றவர்கள் ஆங்கிலத்தில் மாமேதைகள் என்பது பொய்யா! எனவே. பயனற்றது என்பது பொருந்துமா! என்று கேட்கலாம் மறுக்கலாம் மயங்கலாம்.

மக்களின் மூளை அல்லது மனம் பற்றிய ஓர் உண்மை (1) சிலர்க்கு உடல் வலிமை மிகவும் கூடுதலாக மாவீரனாக வாழும்படி இருப்பது போல மூளையும் மனமும இருக்கலாம் புரியவில்லையா? பள்ளிப் படிப்பே இல்லாமல் கடைசிவரை கையெழுத்துக் கூடப் போடத் தெரியாமல் வாழ்ந்த ஞானிகள் மகான்கள் இருந்தார்கள் கர்னாடக கணிதமேதை சகுந்தலா கணிதத்தில் மாமேதை ஆனால் 'பள்ளிப்படிப்பு' கூட கிடையாது. அதாவது சகுந்தலாவின் மூளை இயற்கையில் 'கணிதத்தில்' தனித்திறமை பெற்றது. இவ்வாறே, பல மொழிகளை அல்லது பிறமொழியில் பேரறிவு பெறக்கூடிய திறமை சிலரிடம் இருக்கலாம் அப்படி இருப்பவர்களில் நேரு, சீனிவாச சாஸ்திரி, கா. அப்பாத்துரை, அண்ணாத்துரை போன்றவர்கள் இடம் பெற்றவர்கள்.

எனவே இத்தகைய விதிவிலக்கு மேதைகளை 'பொது விதியாக' எண்ணி படிப்பவரெல்லாம் பிறமொழி மூலம் பேரறிவு பெறலாம் என்று கூறக்கூடாது.

ஆங்கிலேயரின் உதாரணம்: ஆங்கிலேயர் (1) உயர்ந்த மொழி (2) அறிவுமொழி (3) தெய்வமொழி என்று 'லத்தீன் கிரேக்கம் ஜெர்மனி' போன்ற பிற மொழிகள் மூலம் படித்த பொழுது (1) தாய்மொழியான ஆங்கிலமொழியும் வளரவில்லை (2) ஆங்கிலேயர்களின் இயற்கையில் மூளைவளம் கொண்ட

சிலரைத் தவிர ஏனையவர்களிடம சிந்தனை வளரவும் இல்லை என்பதை மறுக்க முடியாது.

இதைக் கண்டதும் மலர் மயங்கலாம் என்பதால் 'தமிழரையே' உதாரணம் காக்க.

தமிழரும், தாய்மொழிப் படிப்பும் :- 1) முதல் வகுப்பு முதல் 'ஆங்கிலம்' மட்டுமே பேச்சு மொழியாக 1940க்கு முன்பு இருந்தது. அதனால் அனைவரும் ஆங்கிலத்தை அழகாகப் பேசினர் என்பது உண்மையே ஆனால் சொந்தறிவு 'அண்ணாத்துரை' போன்ற சிலரிடமே இருந்தது. ஏனைய வரிடம் இல்லை என்பதற்குச் சிறு சான்று' பண்டைய பாண்டி மன்னன் தஞ்சைக்கு வந்தான் என்ற வரலாற்று வாக்கியத்தை (1) ஆங்கிலம் மட்டுமே சொல்ல முடியும் (2) ஆங்கிலம் சொன்னால் மட்டுமே விளங்கும் (3) தமிழில் சொல்ல முடியாது வரலாற்றைத் தமிழ்மொழி மூலம் கற்பிக்கக் கூடாது. கற்பிக்க முடியாது என்ற கல்லூரிப் பேராசிரியர்கள் கூறியதைக் கேட்ட வர்கள் இன்னும் உயிரோடு இருக்கலாம்.

(2) சங்க காலப் புலமையை பலதுறைப்பேரறிவைக் காட்டினால் ஆங்கிலப் பட்டதாரிகள் பரிகசிக்கலாம். ஆனால் திருவள்ளுவர் போன்றவரின் பேரறிவு ஆங்கிலத்தாலோ அன்னிய மொழியாளர் உண்டாகவில்லை.

(3) தஞ்சைப் பெருங்கோவில், கல்லணை, சித்தன்ன வாசல் வண்ணக்கலரை மகாபலிபுரச்சிலை முதலியன பழய கட்டுக்கதையன்று என்றளவு போதும்.

இணைப்பு மொழி எந்தளவு வேண்டும் :-

இணைப்புமொழி இங்க்லீஸ் என்றாலும் இந்தி என்றாலும் எந்தளவு வேண்டும் என்பதுதான் இக்கட்டுரையே தவிர 'இங்க்லீஸ்தான் வேண்டும்' என்றோ 'இந்திதான் வேண்டும்' என்றோ எழுதவில்லை, எனினும் 'இந்தியை' விட 'இங்க்லீஸ்-இணைப்பு மொழியாகலாம் ஆகவேண்டும்' என்பதற்குப் பல நியாயமான காரணம் உண்டு. எப்படி எனில்

(1) ஆங்கிலோ இந்தியர் என்ன இஸ்மக்கள் இந்தியரே இல்லை என்று மறுத்தால் 'துருக்கர் — கிறிஸ்தவர்' என்று மதம் வேறுபட்டவரையும் இந்தியர் ஆகார் என்று கொள்ளவேண்டும்.

ஆனால், இவர்களின் தாயகம் இந்தியாவே என்பதில் ஐயமில்லை. இவ்வாறு 'இந்தியாவை' தாயமாகக் கொண்ட ஆங்கிலோ இந்தியர் ஏறக்குறைய எல்லா மாநிலங்களிலும் உள்ளனர். இவர்களின் தாய்மொழி 'ஆங்கிலமே' என்பதால் இந்தியாவில் பேசப்படுகிற மொழிகளில் ஆங்கிலமும் இடம் பெறுகிறது.

(2) இக்காலக் கல்வியால் இந்தியா முழுவதும் 'ஆங்கிலம்' படிப்பு மொழியாக இருக்கிறது. இந்தளவு இந்தி உள்ளிட்ட எந்த மொழியும் இல்லை.

எனவே, இணைப்புமொழி என்று ஆங்கிலமே இருக்கலாம்.

(3) ஆங்கிலம் இணைப்புமொழி ஆனால் வடநாட்டாரும் இந்தி - ஆங்கிலம் என்ற இருமொழிகளைப் படிக்கவேண்டும். தமிழரும் தமிழ் ஆங்கிலம் என்று இரண்டு மொழிகளைப் படிக்க வேண்டும். ஆனால் இந்தி என்று கொண்டால்' தமிழர்கள் வெள்ளையர் ஆட்சியில் இருந்தது போல இருக்க வடவர் மட்டும் விடுதலை நாட்டார் போல வாழ நேரிடும்.

இவ்வாறு கூறுவதால் இன்றுபோல எல்லோருமே இங்க்லீஸ் படிக்கவேண்டும் என்பதாக எண்ணவும் கூடாது. எடுக்கவும் கூடாது.

வேலையும் - மக்களும் :- (1) தமிழர்கள் அனைவரும் தமிழகம் கடந்த வெளிநாட்டில் பணி புரியலாம் என்பதோ பணிபுரிகிறார்கள் என்பதோ சரியாகாது (2) தமிழகத்தில் வேலை செய்கிறவர்கள் அனைவரும் குறிப்பாக மத்திய அரசுக்கு உரிய தபால் தந்தி புகைவண்டி போன்ற துறையில் பணிபுரிகிற அனைவருமே (1) டில்லியுடனோ (2) அமெரிக்கா போன்ற பிற நாடுகளுடனோ 'தொடர்பு' கொள்ளுகிறார்கள் என்றோ கொள்ளும்படி வேலையுள்ளது என்றோ எழுத முடியாது.

அதாவது கலெக்டர் போன்றவர்களும் பெரும் முதலாளிகளும் மட்டுமே பிறநாடுகளுடன் 'தொடர்பு' கொள்ளுகிறார்களே தவிர (1) அரசு ஊழியர்களும் (2) தனியார் நிறுவனத் தொழிலாளிகளும் (3) கல்லூரிப் பேராசிரியர்கள் டாக்டர்கள் போன்றவர்களும் நேரடியாக வெளிநாட்டு மக்களுடன் உறவாட வேண்டியநிலை இல்லை - என்பதை மறுக்க முடியாது.

எனவே, தமிழர்கள் 'அனைவரும்' ஆங்கிலம், இந்தி போன்ற இணைப்பு மொழிகளைக் கற்பதால் பயனில்லை' (என்றதும் பதறாமல் தொடரவும்) (3) தட்டச்சு (டைப்) வேலை பெரிய நிறுவனங்களுக்கும் அலுவலகங்களுக்கும் (ஆபீஸ்களுக்கும்) தேவையானதே என்பதால் அங்கு பணிபுரியும் அனைவருமே 'தட்டச்சு' கற்றுக்கொள்ள வேண்டும் என்பதோ கற்றவர்களாக இருக்கவேண்டும் என்பதோ தேவையற்ற நினைப்பு.

மேலும் தனிப்பட்ட முறையில் 'கலெக்டர், டைரக்டர் நிறுவன முதலாளி மேனேஜர் போன்றவர்கள் 'டைப்' தெரிந்தவராக இருந்தாலும் ஆபீஸில் டைப் செய்யத் தனியே டைப்பிஸ்ட் இருப்பார்களே தவிர ஆபீஸ் கடிதங்களைக் கலெக்டரே டைப்செய்வார் என்றோ செய்யவேண்டும் என்றோ சொல்லலாமா ? நடைபெறும் செயலாக இருக்கிறதா ? எண்ணுங்கள்.

(4) அனைவருமே படிக்க வேண்டும் - என்பதால் எல்லோருமே M. B , B S , மட்டுமே படிக்கவேண்டும் என்று கூறலாமா ? M. B., B S , மட்டுமா படிப்பு ? இது மட்டும் போதுமா ?

இவ்வாறுதான் மத்திய அரசு, மற்ற மாநில அரசு, வெளிநாடு ஆகியவற்றுடன் 'தொடர்பு கொள்ள' (!) தட்டச்சு போல மொழிபெயர்ப்பு துறை என்று தனியொரு பணி (வேலை) அமைக்கலாம் இல்லை அமைக்க வேண்டும் (2) இப்பதவி தேவைப்பட்ட நிறுவனம் அலுவலகம் ஆபீஸ்களில் இருக்க வேண்டும்.

'இருக்க வேண்டும்' என்ற இக்கருத்து இன்றைய நடைமுறையே ஆகும். புரியவில்லையா ? நமது டில்லியில் இருக்கிற வெளிநாட்டுத் தூதுவர்கள் அனைவருக்குமே 'ஆங்கிலம்' தெரியும் என்று கொண்டாலும் டில்லிக்கு வருகிற வெளிநாட்டுப் பிரதமர், மன்னர், முதலாளி போன்றவர்களில் 'ஆங்கிலம்' தெரியாதவர்கள் வந்தார்கள் வருகிறார்கள். இவ்வளவு ஏன் ? நமது காமராஜர், சிவாஜிகணேசன் போன்றவர்கள் பல நாடுகளுக்குச் சென்றுள்ளனர். அத்தனை நாடுகளிலும் பேசப்படுகிற மொழிகள் இவர்களுக்குத் தெரியுமா ? மொழிபெயர்ப்பாளர்களே இதந்தனர் என்பது பொய்யன்று.

இவ்வாறு 'மொழிபெயர்ப்புத்துறை அல்லது தனிப்பதவி அமைக்க வேண்டும் அப்பதவியில் பணிபுரிய 'மருத்துவக் கல்லூரி சட்டக்கல்லூரி' இருப்பது போல 'ஆங்கிலக் கல்லூரி இந்திக் கல்லூரி என்று அமைக்க வேண்டும். இச்செய்தியும் புதியதல்ல, தமிழகம் உள்ளிட்ட எல்லா நாடுகளிலும் 'பிற மொழிக் கல்லூரிகள்' இல்லாமல் இல்லை. இருக்கின்றன என்றதும் இதனைத் தவறாக எடுத்துக் கொள்ளக்கூடாது.

அதாவது 'பிறமொழிகளைப் படிப்பது வேறு பிற மொழியை ஆட்சி மொழியாக ஏற்பது வேறு.

முடிவுரை இதுவரை கூறியவைகளால்

(1) குழந்தையைத் தாய்ப்பால் வளர்ப்பது போல (1) தாய்மொழி அல்லது (2) ஊரார்மொழி மூலமே கற்க வேண்டும் கற்றால் மட்டுமே படிப்பின் பயன் கிடைக்கும் என்ற கருத்தை 'கருத்தளவில்' எல்லோரும் ஏற்றுக்கொண்டு விட்ட தால் இச்செய்தியை இக்கட்டுரையில் விவரிக்கவில்லை.

(2) ஊரார்மொழி என்றால் ஊரில் பேசும்மொழி தமிழகத்தில் குடியிருக்கிற மற்ற மொழிக்காரர்களுக்குத் 'தமிழே' ஊரார் மொழி, தமிழன் சீனாவில் குடியிருந்தால் சீனமொழியே ஊரார் மொழி.

(3) மன்னர் எவ்வழி மக்கள் அவ்வழி என்ற மனப் பான்மை 'மொழியை'ப் பொறுத்தவரையில் பரிபூர்ணமாக விளங்குகிறது. இதனால் (1) மன்னரின் அல்லது மன்னர் குடும்பத்தாரின் மொழியே மக்களின் மனதில் 'அறிவு மொழி யாக' இடம்பெற்றது பெறுகிறது (என்றளவு போதும் என்ன ஆதாரம் என்பதால் விடைவருமாறு)

(1) ஆங்கில நாட்டை ஆண்ட முதலாம் ஜார்ஜ் மன்னர்க்கும் மன்னரின் குடும்பத்துக்கும் ஆங்கிலம் தெரியாது இதனால்தான் 18-ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயர் ஆங்கிலத்தை ஆதரிக்கவில்லை.

(2) இந்தியாவை ஆங்கிலேயர் ஆண்டதால் ஆங்கிலம் நம்மிடம் 'அறிவுமொழி' என்ற எண்ணத்தை ஏற்படுத்தியது அல்லது நம்மவர் ஏற்றனர். இத்தகைய மனப்பான்மையை உலகெங்கும் ஆதிகால முதல் காணலாம்.

(3) இந்தியா விடுதலை பெற்ற பொழுது டில்லியில் ஆட்சியை அமைத்த காங்கிரஸின் தலைமை 'இந்திக்காரர்கள் இடம்' இருந்ததால் இந்தியே இந்திய அரசுமொழி இணைப்பு மொழி என்ற எண்ணத்தை ஏற்றனர் ஏனையவரிடம் ஊட்டினர் என்பதுடன் இன்றைய மத்திய அரசின் மனப்பான்மை நீடித்தால் கி.பி 2050க்குள் இந்திய அறிவுமொழி என்ற எண்ணம் நிலைத்துவிடும் என்பதை உறுதியாக நிறுவலாம் இந்த மனப்பான்மையின் சாயலே 'இந்தியைக் கட்டாயப் பாடமாக்க வேண்டும்' என்ற கருத்தாகும். தற்பொழுது வானொலி முதலியவற்றில் இந்திமொழி உச்சரிப்பில் சொற்களையும் பெயர்களையும் கூறும் காரணம் இதுவேறு ஆகும்.

(4) நம் அரசியல் சட்டம் ஏற்றபடி தமிழ் மாநிலத்தில் தமிழ் மட்டுமே ஆட்சிமொழி கல்லூரி மொழி இவ்வாறு பீகாரில் இந்தி மைசூரில் கன்னடம் ஆகவேண்டும். (2) தமிழில் கலைச்சொல் இல்லை என்ற வாதம் அர்த்தமற்றது (வாசகர் விரும்பினால் கலைச் சொற்களை ஆக்கும் வழிவகைகளை வரையலாம்.)

(5) டைப்பு மருத்துவம் வணிகம் போல 'இந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளை மொழிபெயர்க்கும் தனிப்பதவியை 'தேவைப்பட்ட' இடங்களில் கொள்ள வேண்டும்.

(6) மருத்துவர், வக்கீல், டைப்பிஸ்ட், மெக்கானிஸ்ட் போல ''மொழிபெயர்ப்பாளராகப் பணிபுரியவும் பதவிபெறவும் விரும்புவார்கள் மட்டும் 'கல்லூரியளவில்' இந்தி ஆங்கிலம் போன்ற பிறமொழிகளைப் படிக்க வேண்டும்; மருத்துவம் படித்தே மருத்துவர் ஆகவேண்டும் 10 ஆம் வகுப்புக்குப் பிறகே படிக்க வேண்டும்.

(7) படிப்பவர் அனைவரும் ஆங்கிலம் இந்தி படிக்கத் தேவையில்லை படித்துப் பயனும் இல்லை; படிப்பதால் 'சிந்தனை' வளராது விஞ்ஞானியாகவோ சிந்தனையாளராகவோ வளர முடியாது என்பதை நாம் உணரவேண்டும் என்றளவில் முடிக்கிறேன். (பிறமொழியை 10 ஆம் வகுப்புக்குப் பிறகே படிக்கவேண்டும். ஏன்? என்ற காரணத்தை அடுத்த கட்டுரையில் காணலாம்).

சூழலியல் நோக்கில் சிறுகதைகள்

முனைவர் இரா. சண்முகவேலன்
தேர்வு நிலைத் தமிழ் விரிவுரையாளர்
அ. வீ. வா. நி. திரு. புட்பம் கல்லூரி
பூண்டி - 613 503.

சூழலியல் ஓர் அறிவியல் (Environmental Science). அனைவர்க்கும் சூழ்நிலை தெரியுமாயினும், புரியுமாயினும் அக்கறை காட்டாததால் இன்றைக்கு மனித குலம் பெரும் நெருக்கடிக்கும் பேரிடற்பாட்டிற்கும் ஆளாகியிருக்கிறது; பேரழிவை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறது. ஆதலினால், உலகெங்கிலும் சுற்றுச்சூழல் விழிப்புணர்ச்சி வீறுகொண்ட எழுச்சியாகத் தோன்றியுள்ளது. இக்கட்டுரை சிறுகதைகளில் காணப்படும் சுற்றுச்சூழல் சிந்தனைகளை ஆராய்ந்து எடுத்துரைப்பதை நோக்கமாகக் கொண்டிருக்கிறது.

சுற்றுச்சூழலும், மனிதனும்

சுற்றுச்சூழல் என்பது நிலம், நீர், காற்று, வான்வெளி, காடுகள், விலங்குகள், மனித சமுதாயம், மனித சமுதாயத்தின் வாழ்க்கை முறைகள், கண்டு பிடிப்புக்கள், அவற்றின் விளைவுகள், பண்பாடு, நாகரிகம் எனப் பலவற்றையும் குறிப்பதாகும்.

சுற்றுச் சூழல் இயற்கை சார்ந்த சூழல் (நிலம், நீர், காற்று விண்வெளி, வெப்பம்), உயிரினங்கள் சார்ந்த சூழல் (வைரஸ் - நுண்ணுயிரிகள், பாக்டீரியா, தாவரங்கள், விலங்குகள்), சமூகம் சார்ந்த சூழல் (மக்கள், பண்பாடு, அரசியல், பொருளாதார அமைப்பு நிலைகள்) என மூன்று வகையாகப் பிரிப்பர்.

மனிதன் மற்ற உயிரினங்களைப் போலவே இயற்கைச் சூழ்நிலையில் பிறந்து வளர்ந்து தன்னுடைய அறிவாலும், சிந்தனையாலும் படிப்படியாகப் பண்பாட்டிலும், நாகரிகத்திலும் மேம்பட்டு உயர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கிறான். ஏனைய உயிரினங்கள் இயற்கைச் சூழ்நிலைக்கேற்பத் தம்மை மாற்றிக் கொள்கின்றனவேயொழிய, சூழ்நிலையை உருவாக்குவதில்லை. ஆனால், மனிதன் சூழலுக்கேற்பக் தன்னை மாற்றிக்கொள்வதோடு சூழலை மாற்றுபவனாகவும், புதிய சூழலை உண்டு பண்ணுபவனாகவும் இருக்கிறான்; ஆயினும், மனிதன் இயற்கையிலிருந்து அந்நியப்பட்டு, இயற்கை வளங்கள் வழங்கிய இன்பங்

களைப் புறந்தள்ளி, அவற்றிற்கு ஈடாக நவீன கண்டுபிடிப்புக் களினால் இன்பத்தைச் சேர்ப்பதாக எண்ணிக்கொண்டு துன்பத் தைச் சேர்த்துக்கொண்டு – சுமந்துகொண்டு உழல்கின்றான்; தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்கிறான். சுருங்கச் சொன்னால், சுற்றுச்சூழல் தக்க அமைந்து உதவும் வரையில் மனிதன் மண்ணகத்தில் வாழ முடியும் (Man Can Survive on the Earth only. So long as his environment is fit to support him and things around - David N. Sen)

நீர்

'நீரின் றமையா துலகு ..' — குறள்

தாயைப் பழித்தாலும் தண்ணீரைப் பழிக்கக் கூடாது.

— பழமொழி

உலகில் மூன்று பங்கு நீரும் ஒரு பங்கு நிலமும் உள்ளன. நீர் குடிப்பதற்கும் குளிப்பதற்கும் மட்டுமின்றி மனிதனின் ஆக்கங்களுக்கும் அழிவுகளுக்கும் பயன்படுகிறது; மருத்துவ நிவாரணியாகவும் விளங்குகிறது. நீர், நில மேல் நீர் (ஆறு, ஏரி, குளம், கடல், வாயுமண்டலம்) என்றும், நிலத்தடி நீர் (ஊருணி, கிணறு, சுனை) என்றும் இருவகைப்படும்.

நீரின் தூய்மை பலவேறு காரணிகளினால் கெடுக்கப் படுவதால் இந்தியாவிலுள்ள மொத்த நீரின் அளவில் 70 விழுக் காடு அளவு தூய்மையற்றதாக உள்ளது. நீரின் தூய்மை இன்மையால் டைபாய்டு, மஞ்சள் காமாலை, காலரா, வயிற்றுப் போக்கு போன்ற நோய்களினால் உலகில் நாள் ஒன்றுக்கு ஏறத்தாழ 10 கோடி மக்கள் அவதியுறுகின்றனர். 1955-56 ஆம் ஆண்டில் யமுனை நதியின் தூய்மைக் கேட்டினால் தில்லியில் ஏறக்குறைய 40,000 பேர்கள் மஞ்சள் நோயினால் பாதிக்கப் பட்டனர்.

தண்ணீர் தட்டுப் பாட்டினால் நிலத்தடி நீர் பயன்படுத்தப் படுகிறது. லண்டன், டோக்கியோ, பாங்காக் - ஹில்டன், மெக்ஸிகோ, லாஸ்வேகாஸ் போன்ற நகரங்கள் சிறுகச் சிறுக அழுந்திக் கொண்டு வருகின்றன. காரணம், அவர்கள் நிலத்தடி நீரை அதிகம் பயன்படுத்துதலே ஆகும்.

அஸ்வகோஷ் எழுதிய சடங்கு (1972) என்னும் சிறுகதை யில் குளத்து நீர் எவ்வாறு மாசுபடுத்தப் படுகிறது என்பதைக் காட்டுகிறது.

குளத்தில் இறங்கி குத்துக்காலிட்டு அமர்ந்து அலம்பிக் கொண்டிருப்பேன் கிழண்டை மூலையில் எவனாவது மாடு குளுப்பாட்டிக் கொண்டிருப்பான். எதிர்பக்க படித்துறையில் யாராவது கோவிலுக்குப் போகிறவன். முக்கி முக்கி எழுந்திருப்பான் நெஞ்சு வரைக்கும் தண்ணீரில் நின்று கரங்களைக் கூப்பி சூரிய நமஸ்காரம் செய்வான். இல்லாவிட்டால் முருகா ... சண்முகா ... வேலாயுதா . . என்று கரையில் இருப்பவனைக் கூப்பிடுகிற மாதிரி கூப்பிடுவான் சில நாசூக்கான நைலான், நைலக்ஸ், டெரிலின் டெரிகாட்டன்கள் இறங்கி முழுகாமல் கொஞ்சம் தண்ணீரைக் கைகளில் அள்ளி தலையில் தெளித்துக் கொள்ளும். பக்கத்தில் எதுவும் புரியாமல் நிற்கும் சின்னஞ் சிறிய வாரிசுகளுக்கும் தெளித்துவிடும்

தீர்த்தமாம் மௌனமாய் சிரித்துக் கொண்டே ஆர அமர சுத்தமாய் அலம்பிக்கொண்டு கரையேறுவேன். காலைத் தட்டி நிக்கரை மாட்டிக் கொண்டு நாடாவை முடிந்தவாறே பின்னால் தூக்கிய வேஷ்டியுடன் வந்து கொண்டிருப்பேன் ...

இன்குலாப் எழுதிய கிணறு (1992), சாதிக் கலவரங்களினால் மாசுபடுத்தப்படுவதைக் கோடிட்டுக் காட்டுகிறது, கதையின் தொடக்கத்தில் சூழ்நிலையின் பாதிப்பினால் மழை பொய்த்துப் போனதும், மழை பொய்த்துப் போனதால் கிணறுகள் வறண்டதும் கிணறுகளும் நீர்நிலைகளும் வறண்டதால். ஆக்ரா எண்ணெய் சுத்திகரிப்பாலைப் புகையால் நிறம் மங்கி வரும் தாஜ்மகாலைப் போல் கொக்குகள் சாம்பல் நிறமாக மங்கிப்போனதும் கதை சொல்லியின் கூற்றில் அடுக்கப்படுகின்றன. அதன்பின் சாதிக்கொரு கிணறாக இருந்த அச்சிற்றூர் கிணறுகளெல்லாம் ஒட்டு மொத்தமாக வறண்டுபோக, ஊர்மக்கள் அடுத்த ஊர் கிணற்றிலிருந்து நீர் கொண்டு வரவும், நீராடவும் செல்கிறார்கள் அங்கேயும் சாதிக்கொரு கிணறு தான். ஆதலினால், சாதிக்காரர்கள் கட்டுப்பாட்டை மீறாமல் நடந்துகொள்ள, இளம் வட்டங்கள் கட்டுக்களை மீறிப் பிற சாதிக்காரர்களுக்குரிய கிணற்றில் ஆக்கிரமிக்க, அவ்வூர்க்காரர்களால் அவர்கள் ஏசப்பட்டு விரட்டப்படுகிறார்கள். அதனை அறிந்த ஊர்க்காரர்கள் சாதிக் கட்டுக்களைத் தகர்த்து ஒன்றுபட்டுத் திரண்டு அந்த ஊர்க் கிணற்றில் நீர் எடுப்பதென்று முடிவெடிக்கிறார்கள். இச் செய்தியை முன் கூட்டியே கேள்விப்பட்ட அடுத்த ஊர்க்காரர்கள் கிணற்றில் நரகலை இட்டுத் தடுத்து விடுகிறார்கள். இன்குலாப் கதையை முடிக்கையில்,

> 'இந்தச் செய்தி நல்லிருக்கைக்கும் எட்டி இருக்கனும். இவங்க மறுநாள் காலைலே போயி அந்தக் கெணத்துலே வாளியைப் போட்டுத் தண்ணி அள்ளுனபோது அதுல என்னமோ மிதந்துச்சு கிட்ட வந்தவுடன் பாத்தா நரகல்.'

என்கிறார்.

இவ்வாறு நீரின் கற்புநிலை பாதிக்கப்படுதலை அறிகிற அதே வேளையில் முக்தா வி. சீனிவாசன் எழுதியுள்ள தங்க மணியின் சபதம் (993) என்னும் சிறுகதையில் நீரின் கற்பு - தூய்மை பாதுகாக்கப்படுதலையும் காணமுடிகிறது.

மணிமங்கலம் ஏரியை இன்றைக்கெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கலாம். அவ்வளவு அழகு. கரையைச் சுற்றிலும் பெரிய மரங்கள். அதன் அடர்த்தியான நிழல்களில் எப்போதுமே ஒரு குளுமையின் சுகம். கையைத் தலைக்கு வைத்துக்கொண்டு படுத்தால் கண நேரத்தில் தூக்கம் வந்து விடும்.

> ஊர் பஞ்சாயத்தின் கட்டுப்பாட்டில், ஏரியும் அதன் கரைகளும் சுத்தமாகப் பராமரிக்கப்படுகின்றன. மாடு குளிப்பாட்ட தனித்துறை. பெண்கள் குளிக்க — ஆண்கள் குளிக்க என்று வெவ்வேறு இடங்கள் — குடிநீர் எடுத்துச் செல்ல ஒரு படித்துறை — இப்படி ஒழுங்கு முறைப்படுத்தப் பட்ட ஏரியை இந்த செங்கல்பட்டு மாவட்டத்தில் வேறு எங்கேயும் பார்க்க முடியாது.

என்பது ஆசிரியரின் கூற்று ஆகும்.

காற்று

காற்று இயற்கையின் அரும்பெருங் கொடை. அஃதின் றேல் உயிர் இல்லை; இயக்கம் இல்லை; வாழ்வு இல்லை. ஆதலினால்தான் மகாகவி பாரதியார்,

> காற்றே வா, மகரந்தத் தூளைச் சுமந்துகொண்டு, மனத்தைமயலுறுத்துகின்ற இனிய வாசனையுடன் வா. இலைகளின் மீதும், நீரலைகளின் மீதும் உராய்ந்து, மிகுந்த ப்ராண - ரசத்தை எங்களுக்குக்கொடு. காற்றே வா . . . காற்றுத் தேவன் வாழ்க . . . அவன் நல்ல மருந்தாக வருக. அவன் நமக்கு உயிராகி வருக; அமுதமாகி வருக. காற்றை வழிபடுகின்றோம், அவன் சக்தி குமாரன், மஹாராணியின்

மைந்தன். அவனுக்கு நல்வரவு கூறுகின்றோம். அவன் வாழ்க

என்று எக்களிக்கொட்டி வரவேற்கிறார்.

உலகைச் சுற்றிக் காற்று கவசம்போல் சூழ்ந்துள்ளது. காற்றில் உணவைவிட இன்றியமையாத ஆக்ஸிஜன் உள்ளது. இதயத்துக்கும் மூளைக்கும் போதுமான காற்று வேண்டும். இல்லையேல். மயக்கமும் மரணமும் வாய்க்கும். அத்தகு அரும் பொருள் தொழில் புரட்சியின் விளைவால் வாகனப்புகை, இயந்திரப்புகை, தொழிற்சாலைகள் வெளியேற்றும் புகை போன்றவற்றாலும் ஆலைகள் கக்கும் நுண் துகள்களினாலும் தூய்மைத் தன்மையை இழக்கின்றது அக்காற்று மனிதனை யும் உயிரினங்களையும் பாதிக்கின்றது; உயிர்க்கொல்லி யாகின்றது. 1984-இல் போபால் நச்சுக் காற்றுக் கசிவினால் அப்பகுதியிலிருந்த பலர் மாண்டதும் பல பெண்களும் ஆண்களும் உடற் குறைபாடுகளைக் கொண்டதும் நாமறிந்த செய்தியாகும்.

சுற்றுச் சூழலின் சீர்க் கேட்டினால் நாட்டுப்புறங்களிலும் நகர்ப்புறங்களிலும், காற்றின் அளவ குறைந்து காற்றே இல்லாதது போன்ற ஓர் உணர்வினை உண்டாக்குகின்றது. காற்றில்லாமல் போனால் இருப்பிடமும் இருப்பிடத்திலிருக்கும் மனிதனும் எத்தகைய துன்பத்திற்கு ஆளாகின்றான் என்பதை உணர்த்த மேலாண்மை பொன்னுசாமியின் பாட்டையாவில் (1991) ஒரு குறிப்பு வருகிறது :-

'ஆவணி மாசம் காற்று நின்று போயிற்று. மழைக் கோப்பு முகம் காட்டி விட்டது. வெயில் பழுத்து அடிக்கிறது. உக்ரமான வெயில். சுள்ளென்று உரைக்கிறது. உள்ளுக்குள் ஒருவித படபடப்பையும், இறுக்கத்தையும் ஏற்படுத்துகிறது. வெக்கையும் புழுக்கமுமாய் உடம்பு அவிந்து மூச்சுத் திணறு கிறது.'

காசியபனின் வைத்தியப் பரிசோதனை (1992)யின் கதைத் தலைவன் முகம்மது தன்னுடைய அலுவலகத்தில் வாய்ப்புக் கிடைக்கும்பொழுதெல்லாம் நிம்மதியாகத் தூங்குவான். அப்படி அவன் தூங்கும்போது கேப்டன் சுந்தரம் அவனை எழுப்புகை யில்,

"காப்டன் சுந்தரம் சார், நீங்கள் சுக உணர்ச்சியே இல்லாத மனுசன், போலிருக்கிறது. இந்த உள்ளூர் மலை

> களில் மருத்துவான் மலையிலே போல நிறைய மருந்துச் செடிகள் உண்டு. அங்கிருந்து வரும் காற்று எனக்கு ஆரோக்கியத்தையும் கொடுத்து சொக்கவும் வைக்கிறது. நீங்கள் ஏன் குறுக்கே விழறீங்க?''

என்று எரிந்து விழுகிறான்.

இயற்கை அழிந்து செயற்கை கொடி பிடித்துக் கொண்டிருக்கிற நகரியங்களில் காற்றின் தேவையை மின் சாதனங்களினால் பெருக்கிக்கொண்டாலுங் கூடத் தனிப்பட்ட சிலர் வீட்டைச் சுற்றிச் செடி கொடிகளையும், மரங்களையும் வளர்த்து இயற்கைக் காற்றுக்கு வழி அமைத்துக் கொண்டிருக் கிறார்கள் அடுக்கு மாடி வீடுகளிலும் அலுவலகங்களிலும் தொட்டியில் வளர்க்கப்படும் செடிகளை வளர்க்கிறார்கள். நியுயார்க் விஞ்ஞானக்குழு, தொட்டியில் வளர்க்கப்படும் செடி களில், குறிப்பாக, லில்லி மலர்களில் சுத்தமான காற்று கிடைக் கிறது என்றும், அதிகமான காற்று கிடைக்கிறது என்றும் பொதுவாகத் தொட்டிச் செடிகள் மிகவும் உதவுகின்றன என்றும் அறிவுறுத்தியுள்ளது.

க. வை. பழனிசாமி எழுதியுள்ள இடமாற்றம் (1993) கதையில் வருகிற அப்பாவும் பெண்ணும் தோட்டக் கலைஞர்கள் செடிகளை வளர்ப்பவர்கள். இந்தக் கதையைச் சொல்பவள் மகள்; அவள் சொல்கிறாள் :-

> தோட்டத்தில் உள்ள ஒவ்வொரு செடியும் எங்கள் இருவரின் பராமரிப்பில்தான் வளரும். அதன் ஒவ்வொரு பாகமும் எங்களுக்கு நிச்சயம் தெரியும். அருகில் நெருங்கும் பொழுதே தங்களின் தேவை என்ன என்பதை எங்களிடம் துல்லியமாகக் கூறிவிடும். மனிதர்களை விட செடிகள் எங்களிடம் அதிகம் பேசும்.

''நந்தியாவட்டை உன்னிடம் ஏதாவது இன்று கேட்டதா'' என்பார் அப்பா.

''நேற்று பூஜைக்குப் பூப்பறித்த அம்மா ஒரு பூவை மட்டும் அதில் எடுக்கவில்லையாம்'' என்பேன் அம்மா இடையில் புகுந்து ''யாராவது கேட்டால் அப்பாவுக்கும் பொண்ணுக்கும் ஏதாவது ஆகிவிட்டது என்று நினைக்கப் போகிறார்கள்'' என்பாள் ..

மரங்கள்

இயற்கையின் ஆக்கம் காடு. மனிதனின் ஆக்கம் தோப்பு. காட்டில் கண்டபடி மரங்களும் செடிகொடிகளும் மண்டிக்கிடக்கும். தோப்பில் மனிதன் திட்டமிட்டபடி மரங்கள் வளர்ந்து இருக்கும் காட்டுமரம், தோப்பு மரம், வீட்டு மரம், சாலை மரம் எனக் கூறப்பெறும் எந்த மரமானாலும் அதனால் சுற்றுச் சூழலுக்கு நன்மையே. கோடிக் கணக்கான மரங்கள் காற்று மண்டலத்தில் உள்ள கரியமில வாயுவை அகற்றிப் பிராண வாயுவை வெளியிட்டுக் காற்று மண்டலத்தைத் தூய்மைப் படுத்துகின்றன; மண்ணிலிருந்து நீரை உறிஞ்சி, அதை இலைகளில் தேக்கிவைத்து. அந்நீரைச் சிறிது சிறிதாகக் குளிர்ந்த ஆவியாக வெளியேற்றிச் சுற்றுச் சூழலைக் குளிர்ச்சியாக்குகின்றன; மரங்களிலிருந்து உதிரும் இலைகளும், சருகுகளும், பூக்களும் நிலத்திற்கு நைட்ரஜன், பாஸ்பரஸ் போன்ற சத்துக்களை அளித்து மண்ணை வளப்படுத்துகின்றன; விலங்குகளுக்கும் பறவை இனங்களுக்கும் பிற உயிரினங்களுக்கும் உணவாகவும் உறைவிடமாகவும் விளங்குகின்றன; மனிதனுக்குத் தேவைப்படும் விறகு வீடு கட்டுமான பொருட்கள், காகிதம் பிளைவுட் தயாரிப்பதற்கான மூலப் பொருட்கள், மருந்துகள் தயாரிப்பதற்கான மூலப்பொருட்கள் போன்ற எத்தனையோ பொருட்கள் மரங்களிலிருந்து கிடைக்கின்றன; மண் சரிவையும் அரிப்பையும் தடுக்கின்றன. இத்தகைய நன்மைகளையும் பயன்களையும் கருத்தில் கொண்டுதான் கவிஞர் அப்துல் ரகுமான், "மரங்களே! பூமியின் வரங்களே!" என்று பெருமிதம் பொங்க விளிக்கின்றார்.

பல்வேறு காரணங்களுக்காகப் பயன் தரும் மரங்கள் வெட்டப்படுகின்றன; காடுகளும் தோப்புகளும் அழிக்கப்படுகின்றன இமாச்சலப் பகுதியில் குத்தகைக்காரர்கள் மரங்களை வெட்ட முயன்றபோது கிராமப்பெண்கள் திரண்டு வந்து மரங்களைக் கட்டிப்பிடித்துக்கொண்டு வெட்ட விடாமல் தடுத்தனர். இதனையே சிப்கோ இயக்கம் என்பர். இதேபோல் கர்நாடக மாநிலத்தில் அப்பிக்கோ இயக்கம் தோன்றி ஆயிரக்கணக்கான மரங்களைக் காப்பாற்றியது. மக்களிடம் விழிப்புணர்வைத் தூண்டும் விதத்தில், காடு செழித்தால் நாடு செழிக்கும் என்கிற கூற்றை மெய்ப்பிக்கும் பொருட்டு இந்திய அரசு 'வீட்டுக்கு ஒரு மரம் வளர்ப்போம்' என்னும் விளம்பரத்தை உயர்த்திப் பிடித்திருக்கின்றது.

மரங்களைப் பற்றிப் பல கதைகள் உள்ளன. இங்குக் கந்தர்வனின் மைதானத்து மரங்கள் (1982), டாக்டர் பூவண்ணனின் புதுத் தொழில் (1991), பட்டுக்கோட்டை பிரபாகரின் மரம் (1989), டி. குலசேகரின் பயணம், சுப்ரபாரதி மணியனின் விருட்சங்களும் அவனும் (1989) ஆகிய ஐந்து சிறுகதைகள் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கன. அனைத்துக் கதைகளும் அடிப்படையில் ஒன்று பட்டிருந்தாலும் அணுகு முறையில் வேறுபடுகின்றன. மைதானத்து மரங்கள் நகரியமாதலால் மரங்கள் வெட்டப்படும் கோரக் கொலைக் காட்சியைப் படம் பிடித்துக் காட்டுகிறது. கதைத் தலைவன் முத்து சிறுவனாக இருந்த பொழுதும் குடும்பக்காரனாக இருக்கும்பொழுதும் அவனுக்கு மைதானத்து மரங்கள் சரணாலயமாகவும் மருத்துவ மனையாகவும் விளங்கியிருக்கின்றன. அம்மரங்கள் வெட்டப் பட்டு, வெட்டப்பட்ட இடத்தில் நவீன திரையரங்கமொன்று கட்டப்படுகிறது. கதையின் முடிவுப் பகுதிக்குச் சற்று முன்பு அவனின் நிலை, இருப்பு கீழ்க்காணுமாறு காட்டப் பெறுகின்றன :-

> ...பகிரங்கமாய் அந்தக் கொலைகள் நடந்து கொண்டிருப்பதாகவே இவனுக்குப் பட்டது. பாதம் முதல் தலைவரை உலுக்கியது. இவன் கவலைகளை இனி யார் வாங்குவார்கள்? மரங்கள் மழையை வருவிக்கும் என்று இவனுக்குத் தெரியும். இந்த மரக்கொலைகள் இவன் கண்களிலும் அப்படியே மழையை வரவழைத்து விட்டன. எல்லா அடிகளையும் வாங்கிக்கொண்டு இவன் உன்மத்தன் போல் இந்த மரத்தடிகளில் உட்கார்ந்திருந்தானே தவிர, ஒருநாளும் கண்ணீர் விட்டு அழுவதில்லை. அன்றைக்கு முதன் முறையாகப் பொருமிப் பொருமி அழுதான் ...

புதுத்தொழிலின் நாயகர் பெரியசாமி 'தாவரங்களின் தோழர்; மரஞ்செடிகளை நேசிப்பவர்; ஏழைகளின் ஊட்டியான கோவை மரஞ்செடிகளை அழிப்பதாலும் புகை கக்கும் தொழிற் சாலைகளின் பெருக்கத்தாலும் பணக்காரர்களால் பாலைவனமாக, நகரங்களாக மாறி வருவதைக் கண்டு மனங்கலங்குபவர்; தாம் பிறந்த, தம் முன்னோர் பிறந்த அந்த நகரத்துக்குத் தாம் செய்யும் மாபெரும் தொண்டு, ஒரு சிறிய காடு எனக் கூறத்தகும் பெரிய தோட்டத்தை வளம் குன்றாமல் பாதுகாப்பது எனக் கருதுபவர்.' அத்தகையோரிடம் தொழிலதிபர் ஒருவர் அணுகித் தான் நிர்மாணிக்கப் போகும் தொழிற்கூடத்திற்கு இடமாக்கிக்

கொள்ள அவருடைய தோப்பைக் கேட்கிறார்; மதிப்புக்கு மேலாகக் கொட்டிக் கொடுக்க முன்வருகிறார். ஆனாலும் பெரியசாமி விரும்பாமல் மறுத்தது மட்டுமின்றி அதிபருக்கு மரங்களின் விலைமதிப்பற்ற தன்மையை-உயர்வைப் புள்ளிவிபரங்களோடு எடுத்துரைக்கிறார் :-

"இந்த நகரங்கறதுக்கு என்னோட தோப்பு இதயம் மாதிரி ... உங்க தொழிற்சாலைகள்லேருந்து வெளியேறும் அசுத்தக்காற்றை ஓரளவு இந்த மரங்கள் தூய்மையாக்கிக் கிட்டிருக்கு ... இந்தத் தோப்பை விற்க முடியாது".

தன்னிடமிருந்த புத்தகத்தைப் பிரித்துத் தொழிலதிபர் செந்தில்நாதனிடம் காண்பித்தார். அந்தப் பக்கத்தை அவர் பார்த்தார்

மரங்களின் சேவையால் இயற்கையில் கிடைப்பது	செயற்கையில் அதைப்பெற ஆகும் செலவு
50 ஆண்டுகளான ஒரு மரம் தயார் செய்துள்ள பிராணவாயு	ரூ 2,50,000
அசுத்தப்படுத்தப்படுகின்ற ஆகாய மண்டலத்தை மீண்டும் தூய்மைப் படுத்துகின்ற மரத்தின் செயல்	ரூ 5,00,000
மண் வளத்துக்கும் அதைக் காப்பதற்கும் அந்த மரம் ஆற்றும் பணி	ரூ 2,50,000
வானத்தின் ஈரத் தன்மையைக் காத்து மழை பொழிய அந்த மரம் செய்யும் செயல்	ரூ 3,00,000
பறவைகள் விலங்குகள் ஆகிய உயிரினங்கள் பாதுகாப்பிற்கு அந்த மரம் ஆற்றும் பணி	ரூ 2,50,000
புரதச் சத்தினைத் தயாரிக்கும் அந்த மரத்தின் பணி	ரூ. 20,000
மொத்தம்	ரூ 15,70,000

படித்ததும் மனம் மாறினார் செந்தில்நாதன்; தன்னுடைய தொழிற்சாலையைச் சுற்றியுள்ள வெற்றிடத்தில் மரங்களை நட உத்தரவு பிறப்பித்தார்.

ஈச்வரன் என்பவர் நகரில் ஓரிடத்தை வாங்கிப் பெரிய கட்டிடம் கட்டி அதில் ஜவுளிக் கடையைத் தொடங்கினார். அதன் கம்பீரத்தைக் குறைத்துக் கொண்டிருந்த அரசமரத்தைத் திருட்டுத்தனமாக ஆள் வைத்து நஞ்சூட்ட முயன்றார்; முயற்சியை முறியடித்தான் கதை சொல்லி; அத்துடன் அவருடைய கடை ராசி இல்லாதது என்று கதை கட்டி வதந்தியைப் பரப்பி விட்டான். வியாபாரம் படுத்துவிடக் கடையை விற்று விட்டான் முதலாளி கடை சிமெண்ட் மூட்டைகளை அடுக்கி வைக்கும் கிடங்காக மாறிவிட்டது. ''தேவா சார், நீங்க இல்லைன்னா இந்த மரம் இங்கே இருந்திருக்காது'' என்கிற பாராட்டைப் பெறுகிறான் கதைத் தலைவன். மரம் சொல்லும் கதை இது.

பயணத்தின் கதைத் தலைவன் கௌதம் 'ஆனந்தவிகட'னில் வெளி வந்திருந்த கட்டுரையொன்றைப் படித்ததும் சிகரெட் பிடிக்கும் பழக்கத்தை விட்டுவிடுகிறான்; புகை பிடித்தல் ஒழிப்பு இயக்கத்தைத் தொடங்குகிறான். புகையிலையைப் பதப்படுத்துவதற்காகக் காடுகள் அழிக்கப்படுதலை அறிந்து மக்கள் திரளைத் திரட்டி எதிர்க்கிறான்; கைது செய்யப்பெற்றுச் சிறையில் அடைக்கப்படுகிறான். கதையின் தொடக்கப் பகுதியில் சுந்தர்லால் பகுகுணா என்பார் எழுதிய கட்டுரைச் செய்திகள் தரப்படுகின்றன :-

> மரங்கள் விடுகிற பிராணவாயுவின் தயவில்தான் ஜீவராசிகள் உயிர் பிழைத்திருக்கின்றன. மரங்கள் தான் மழைநீர் கடலுக்குச் சென்றுவிடாமல் பூமியினுள் இழுத்துப் பிடித்து வைக்கிறது. வேர் ஆழமாய் பரவுவதால் மண் அரிமானம் தவிர்க்கப் பட்டு நிலத்தின் செழுமை இறுத்து பிடிக்கப்படுகிறது . . புகையிலையை வாட்டி பதப்படுத்துவதற்காக உலகில் உள்ள மொத்த மரங்களில் பனிரெண்டு சதவீதம் சிகரெட் தொழிலுக்காகவே வெட்டப் படுகிறதாம் ... எத்தனையோ உபகாரம் செய்கிற, இயற்கை பெற்றுத் தந்த செல்வங்களையா வெட்டி வீழ்த்துவது? இயற்கைக்கும் மனிதனுக்கும் இடையிலுள்ள உறவை பலப்படுத்துவதே இவைகள் தானில்லையா? . . . மரங்களை அழிப்பது நம்மை நாமே அழிப்பது மாதிரி.

விருட்சங்களும், அவனும் நீலமலையில் பெய்த பெரு மழையினால் மரங்கள் அடிமுடி சாய்ந்து கிடந்த கோரக்

காட்சியை வருணிக்கிறது. வேதங்களும் புராணங்களும் மரத்தின் பெருமையையும், அது அழிக்கப்படும்பொழுது விடும் தாபத்தையும் கூறுகின்றன. தொன்மத்தில் பிடிப்புள்ளவனான அவன், மரங்கள் அறுக்கப்படும்பொழுதும் துண்டாடப்படும் பொழுதும் கண்டு நெஞ்சு பொறுக்காமல் தானே அதுவாகிக் குமைகின்றான். கதையின் இறுதியில் அவனின் அத்துவைத நிலை குறிப்பிடப்படுகிறது :-

> ... பெரிய மரங்களை வெட்டிக் கொண்டிருந்தார்கள். அறுத்துக் கொண்டிருந்தார்கள். ரம்பம் மரங்களை அறுப்பதை உள்ளீடாகக் காட்டக் காட்ட அவன் உடம்பில் ஏதோ அறுக்கும் கருவி விழுந்து காயம் பட்டது போலிருந்தது. யாரோ பெரிய ரம்பம் ஒன்றைத் தன் உடல்மேல் வைத்து அறுத்துக் கொண்டிருந்தார்கள். ரத்தம் வரவில்லை துகள்களாய் கதைகள் மரத்தூள்கள் போல் விழுந்து கொண்டிருந்தன. பல பாகங்களாய் அவன் ஆனான். கால்கள் துண்டிக்கப்பட்டன, கைகள் அறுக்கப்பட்டன. அவனின் முண்டம் மட்டும் தனியே கிடந்தது. அறுத்த கிளையும், சிறு பாகங்களையும் தனியே கிடத்தியிருந்தனர் மரத்தின் நடுபாகங்களையும் பெரிய பாகங்களையும் தனியாக்கினர். அவனின் முண்டத்தை அதனுடன் போட்டனர் அவனின் கைகளையும் கால்களையும் குப்பைக்குள் போட்டார்கள். அவனால் உட்கார்ந்திருக்க முடியவில்லை ...

இட நெருக்கடி

மக்கள் தொகைப் பெருக்கம் சுற்றுப்புறச் சூழலையும் ஆன்மீகப் பண்பாட்டுச் சூழலையும் பாதிக்கின்ற முக்கியமான தொரு காரணி ஆகும். ஒவ்வொரு நாளும் உலகில் 3,33,000 குழந்தைகள் பிறப்பதாகவும், 1,34,000 பேர்கள் இறப்பதாகவும் உலக மக்கள் தொகை 2,00,000 ஆக உயர்கிறது என்றும் கணக்கிடப்பட்டுள்ளது. இப்படி நாளுக்கு நாள் கூடிவரும் மக்கள் தொகையினால் உலக மக்களில் மூன்றில் ஒரு பங்கு அல்லது அதற்கும் கூடுதலான தொகையில் உள்ள மனிதர்களுக்கு உண்ண உணவு உடுக்க உடை, வசிப்பதற்கான வீட்டு வசதிகள் கிடையா. இந் நூற்றாண்டில் இத்தகு மக்கள்தொகை வெடிப்பு (Population Explosion) ஏற்பட்டிருக்கிறது.

(தொடரும்)

வேண்டுகோள்

இலக்கியம் இலக்கணம் சமயம் தத்துவம் வரலாறு கல்வெட்டுகலை பற்றிய ஆய்வுக்கட்டுரைகள் வேண்டப் பெறும் கட்டுரைகள் 4-6 பக்க அளவில் அமைதல் நலம் நெடிதாயின் வகைப்படுத்தித் தருதல் வேண்டும். ஒரு பக்கத்தில் தட்டச்சு அல்லது தெளிவான கையெழுத்தில் அமைதல் வேண்டும். ஆசிரியர் குழு தேர்ந்தளிக்கும் கட்டுரைகளே வெளியிடப்பெறும். இன்றியமையாத அடிக் குறிப்புக்களே சேர்க்கப்படும். தேரப்பெறாத கட்டுரைகள் திருப்பியனுப்பப்பெறா. ஆதலின் கட்டுரைகளைப் படியொடுத்துகொண்டு அனுப்பி வைக்க வேண்டுகிறேன்.

தமிழ்ப் பொழில் ஆசிரியர் குழு

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடுகள்

யாழ்நூல் — ஆசிரியர் விபுலானந்த அடிகள்	ரூ	100	00
கட்டுரைப் பொழில் தமிழ்ச்சங்க மணிவிழா மலர்	,,	30	00
கட்டுரைப் பூங்கா (தமிழவேள் த. வே. உமாமகேசுவரனார் நூற்றாண்டு நினைவு வெளியீடு)	,,	60	00
இராசராசசோழன் முடிசூடிய 1000 ஆவது ஆண்டுவிழா நினைவு சிறப்பிதழ்	,,	6	00
கபிலர்—நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார்	,,	4	00
நக்கீரர்—நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார்	,,	8	00
மெய்ஞ்ஞானத்தின் கொலுவிருக்கையில அஞ்ஞானத்தின் வழக்கீடு பா.வே. மாணிக்க நாயக்கர்	,,	2	00
கவியரசு நினைவு மலர்	,,	1	00
தமிழரசி குறவஞ்சி	,,	0	75

பிற வெளியீடுகள்

தொல்காப்பியம் ஆராய்ச்சிக் காண்டிகையுரை			
எழுத்ததிகாரம்	,,	40	00
சொல்லதிகாரம்	,,	45	00
கரந்தைக் கோவை [ச.பாலசுந்தரம்]	,,	7	50
கலைக் கூத்தன் கவிதைகள்	,,	4	50
தமிழகத்தின்கதாகாலட்சேபம் [இரா. குருநாதன்]	,,	12	00

வளரும் சரித்திரம், நாட்டிய நாடகம் [இரா.குருநாதன்] இலவசம்

விற்பனைக் கழிவு 20% உண்டு. அஞ்சல் செலவு தனி

தலைவர்

கரந்தைத் தமிழ்ச் சங்கம்

தஞ்சாவூர் 613 002

Regd. No. TN/TJ/24

நூல்-அஞ்சல்

பெறுநர்

திருமிகு இரா. சிங்கவேலன்

அவர்கள்

தமிழ்ப் பேராசிரியர்,

தென் மேட்டுத் தோரத் தெரு,

தஞ்சை-1

ஆசிரியர்,
தமிழ்ப்பொழில்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர்-613 002.

தமிழ்ப் பொழில் கட்டணம்

		உள்நாடு	வெளிநாடு
தனியிதழ்	ரூ.	3.00	3-50
ஆண்டுக் கட்டணம்	ரூ.	36-00	72-00
வாழ்நாள் கட்டணம்	ரூ.	250-00	600-00

வெளியிடுபவர் : திரு. ச. இராமநாதன், தலைவர்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர்-613 002

அச்சிடுபவர் : இரா. வைஜெயந்திமாலா,
லக்ஷ்மி பிரிண்டர்ஸ், 1086, காக்கா வட்டாரம்
தஞ்சாவூர்-613 009